121

ஜகன் மோகினி

அக்டோபர் 1954 **JAGAN MOHINI** அணா நான்கு

ESTD. 1923

121
1-55
7 JAN 1955 MADRAS

தெய்வபக்தியும், தார்மிக சிந்தனையும், அன்னை தயையும் பூத்துக் குலுங்கும், லோகானுபவம் முதிர்ந்த, ஸ்ரீமதி. N. புஷ்பம்மாள், (உபதலைவி, மகாத்மாஜி ஸேவா சங்கம்) தமது சொந்தச் சொத்திலிருந்து ஆயிரம் ரூபாய் ஷை சங்கத்திற்கு நன்கொடையளித்து, வழிகாட்டி, அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார் (அதனைப் பின் பக்கம் காண்க).

3L
ஜை211,N22 54·31·10

சங்கத்தின் தாயார்

உலகத்திலுள்ள சகலமான ப்ராணிகளுக்கும் மக்களுக்கும் அம்மா என்கிற ஒரு தனிப்பட்டவளிடத்தில் உதிக்கும் அன்பிற்கு ஈடு எதிரே சொல்ல முடியாது. ஆதியந்தமற்ற பரம்பொருளாகிய பகவான்கூட தாயின் அன்பைத் தானும் அனுபவிக்கும் பொருட்டுத்தான் ராமக்ருஷ்ணாதி அவதாரங்களை எடுத்தாரோ! என்று ஐயுறுகிறோம். அத்தகைய தாயாரின் அளவுகடந்த வாத்ஸல்யத்திற்கு ஒப்பு வேறு எதுவுமே நிற்கமுடியாதல்லவா!

எங்கள் சங்கம் செய்த பாக்யத்தின் விசேஷத்தால் அத்தகைய மாசிலா மாணிக்கம்போன்ற தாயாரை நாங்கள் அடைந்திருப்பதை மிகுந்த பெருமிதத்துடன் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள் தான் இவ்விதழின் மேலட்டையை அலங்கரிக்கும் அருமைத் தாயான ஸ்ரீமதி N. புஷ்பம்மாளாவர். அந்தம்மாளின் தயாளகுணத்தழகும் சீரிய ஒழுக்கத்தின் சிறப்பும் பெரிய குடும்பத்தைத் திறமையுடன் நிர்வகித்து நடத்திய—நடத்தும்—பொறுப்பும் கருத்தும் வாய்ந்த உத்தம குணத்தழகும் இச்சிறிய ஏட்டில் எழுதிமுடியாது.

மொத்தமாகச் சங்கத்திற்கே அந்த உத்தமி அன்னை என்றால் மிகையாகாது. அவர்கள் புகழையோ, படாடோபத்தையோ விரும்பாது தருமம் செய்வதே தனது கடமை என்ற முறையில், நூற்றுக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்குப் பால் தர்மமும், கல்விதானமும் செய்துவந்த பெருமையைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

அத்தகைய அன்னை சென்ற செப்டம்பர் 12-தேதி காலையில் என்னைத் தம் வீட்டிற்கு அழைத்து ஒரு கடிதமும் அதோடு ஆயிரம் ரூபாய் செக்கு ஒன்றும் கொடுத்தார். அதைப் பார்த்த என் உணர்ச்சி கட்டுமீறிப் பொங்கியது. சங்கத்தின் நிரந்தர ஸேவையாகிய உபகாரச் சம்பளத்திற்கும், திருப்பாவை, த்யாகராஜ கீர்த்தனைப் போட்டிகளில் முதல் பரிசு கொடுப்பதற்கும், இந்த ஆயிரம் ரூபாயின் வட்டியை உபயோகிக்க வேண்டும் என்றும் கடிதத்தில் எழுதியிருந்ததைப் படித்துப் பூரித்தேன்.

13-ந் தேதியன்று ஸ்ரீமதி அலமேலு வெங்கட்ராமன் தலைமையில் நடந்த பாரதியார் தினத்தன்று அந்த நன்கொடையைப் பகிரங்கமாகவே கொடுத்து உதவவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதன்பேரில் அந்தம்மாள் 13-ந் தேதியன்று நன்கொடைத் தலைவி ஸரஸ்வதிபாயிடம் கொடுத்ததோடு அளவற்ற அன்பை வெளியிட்டு ஒரு ப்ரஸங்கமும் செய்தார். அதன் ஸாரத்தையப்படியே கீழே கொடுத்திருக்கிறேன்.

சங்கத்தின் அன்னையின் வேண்டுகோளைக் கேட்ட உபதலைவி ஸ்ரீமதி M. O. ஜானகியம்மாள், கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீமதி E. ஸ்ரீநிவாஸம்மாள் ஆகிய இருவரும் தாம் கொடுத்திருந்த 101 ரூபாய் கடனை 60 ரூபாய் ஜீவியச் சந்தாவுக்கும் 41 ரூபாய் நன்கொடைக்காகவும் வைத்துக்கொள்ளும்படித் தெரிவித்துப் பேருதவிசெய்து விட்டதானது மிகவும் பாராட்டக்கூடியதாகும்.

[தொடர்ச்சி: ராப்பர் 3-ம் பக்கம்.]

பகவத்விஷய ரஸாநுபவம்

[திருவாய்மொழிப் பொருளமுதவெள்ளம்.]

ஸ்ரீ காஞ்சி மஹா வித்வான் உ. வே. ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

திருவாய்மொழி முதற்பதிகத்தில் ஆறுபாசுரங்களின் பிரமேயம் இதுவரை நிரூபிக்கப்பட்டு முடிந்தது. இனி ஏழாவது பாசுரத்தின் பிரமேயம் நிரூபிக்கப்படுகிறது. ஏழாவது பாசுரம்,

“ திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.” என்பது.

திருவாய்மொழியாயிரத்தினுள்ளும் இப்பாட்டு உயிரானதென்று ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்களால் குலாவப்படுகிறது. ஸ்ரீ ராமாநுஜருடைய கட்டளையினால் முதன்முதலாகத் திருவாய்மொழிக்கு மிகவும் சுருக்கமான வியாக்கியானமருளிச்செய்தவர் திருக்குருகைப்பிரான்பிள்ளை யென்னு மாசிரியர். அதற்கு ஆறுயிரப்படியென்று திருநாமம். அதில் இந்தப் பாசுரத்திற்கு இட்டவுரை மிகப் பெரிதாய் உபநிஷத்து மயமாகவே காண்கிறது. அத்வைதம் விசிஷ்டாத்வைதம் த்வைதம் என்று வழங்கும் மதங்களெல்லாம் உபநிஷத்துக்களையே மூலமாகக்கொண்டவை. நம்மாழ்வார் விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்திற்கு மூலஸ்தம்பமானவர் என்றுவைணவர்களால் கொண்டாடப்பட்டு வருகிறார். அவருடைய ஸ்ரீஸூக்திகள் கொண்டே ஸ்ரீராமாநுஜர் வேதாந்த விழுப்பொருள்களை அறுதியிட்டாரென்றும் சிறப்பாகச் சொல்லப்பட்டு வருகிறது. விசிஷ்டாத்வைதம் என்கிறவொரு கொள்கையை இந்த ஏழாவது பாசுரமே நிலைநாட்டிக் கொடுத்ததாக ஸம்பிரதாயம் வல்ல பெரியார்கள் பகர்வது. ஆகவே இப்பாசுரத்தின் பொருளையும் கருத்தையும் விளக்கமாகக் காட்டவேண்டியதாகிறது. அறிய வரிய வேதாந்தப் பொருள்களையும் எளிமைப்படுத்தி யுபதேசிப்பது நம்மாழ்வார்க்குத் தன்னேற்றம். ஆனாலும் இவ்விஷயம் மிகப் பெரிதாதலால் வாசகர்கள் ஊன்றி நோக்கித் தெளியவேணும்.

நிலம் நீர் தீ கால் விண்ணெனும் பஞ்சபூதங்களை ஆதாரமாகக் கொண்டு அவற்றினின்று படர்ந்த பொருள்கள் யாவும் தானேயாய், அப்பொருள்களெல்லாவற்றிலும், உடலினுள் உயிர் உறைந்திருப்பதுபோல மறைந்து உள்ளிலும் வெளியிலும் வியாபித்து, இங்ஙனம் தேசுபொலிந்த வேதத்தில் ஓதப்படுபவனான எம்பெருமான் ஸம்ஹாரகாலத்தில் இவற்றையெல்லாம் தன் பக்கலிலே யாக்கிக்கொள்ளும் தேவனுவான்—என்பது பாசுரத்தில் எழுத்தடைவே கிடைக்கும் பொருள். இதில் வெளியாகும் கருத்தை இனி விவரித்துக்காட்டுகிறோம்.

உலகில் நம்முடைய வழக்குக்கள் இரண்டுவகையாக இருப்பதைக் காண்கிறோம். 'நான் அவனைக் கண்டு பேசி அவனுடனே

கொடுக்கப்பட்ட பொருளை என் மகனுக்குக் கொடுத்து, அவனிடமிருந்து பெற்ற மற்றொரு பொருளை அவனுடைய அனுமதியினால் வேறொருவனிடத்திலே சேர்ப்பித்தேன்' என்றொரு வாக்கியமிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இந்தச் சொற்றொடரில் ஏழு வேற்றுமைகளும் கலந்து வந்திருப்பதைக் காணலாம். உலக வழக்குக்கள் பெரும்பாலும் இப்படித்தானிருக்கும். ஒரு சொற்றொடரில் ஏழு வேற்றுமைகளும் நியதமாக வராவிட்டாலும் இரண்டு மூன்று வேற்றுமைகளாவது அவசியம் வந்து தீரும். 'நான் கடவுளை வணங்கினேன்' 'நான் பசுவை வாங்கினேன்' என்றாற்போன்ற வழக்குக்களில் இரண்டு வேற்றுமைகளைக் காண்கிறோம். 'நான் காலால் நடந்து கோவிலுக்குச் சென்றேன்' 'பசுவானது பாலினால் நம்மை வளர்க்கிறது' 'பசுவுக்குப் புல் அதிகமாக இட்டால் அதனிடமிருந்து நாம் அதிகமான பலனை அடையலாம்' என்றாற்போன்ற சொற்றொடர்களில் பல வேற்றுமைகளின் பிரயோகங்களைக் காண்கிறோம். லோகவ்யவஹாரமெல்லாம் இங்ஙனே பல வேற்றுமைகளின் பிரயோகங்கொண்டே நிகழும். பல வேற்றுமைகள் பயிலாது ஒரே வேற்றுமை பயிலும் வ்யவஹாரமும் சிறு பான்மையுண்டு. எங்ஙனே யென்னில்; ஒரு பிரமசாரியைச் சுட்டிக்காட்டி 'இவன் நெருப்பு' என்கிறோம்; வலிமை மிக்க ஒரு சூரனைக் காட்டி 'இவன் சிங்கம்' என்கிறோம். இப்படி அனேக வ்யவஹாரங்களைக் காணலாம். இந்தப் பிரயோகங்களில் முதல் வேற்றுமையொன்றுதானுள்ளது. பல வேற்றுமைகள் இல்லை. இவ்விரண்டு வகையான உலக வழக்குக்களையும் மனத்திற் கொண்டு ஆராய்ச்சி செய்வோம். பல வேற்றுமைகளின் பிரயோகங்கொண்ட வார்த்தைகளினால் நமக்கு பேதவுணர்ச்சி உண்டாகிறது. 'நான் அவனைக் கண்டேன்' என்னும்போது கண்டவொருவனும் காணப்பட்ட மற்றொருவனுமாக இரண்டு நபர்கள் தேறுகிறார்களென்பது விவரியாமலே விளங்கும். ஒரே வேற்றுமை கொண்டு வழங்கும் வார்த்தைகளில் இப்படிப்பட்ட பேதவுணர்ச்சி உண்டாவதில்லை. 'பிரமசாரி நெருப்பு' என்னும்போது பிரமசாரியும் நெருப்பும் ஒரே பொருளாகத் தோன்றுவதல்லாமல் இரண்டு பொருளாகத் தோன்றுவதில்லை. 'இந்த சூரன் சிங்கம்' என்னும்போதும் அப்படியே.

ஆக, லோகவ்யவஹாரங்களில் பேதவுணர்ச்சியையூட்டும் வாக்கியங்கள் போலவே அபேதவுணர்ச்சியை யூட்டும் வார்த்தைகளும் வழங்கிவருகின்றன வென்பதை நிரூபித்தோமானோம். அபேதவுணர்ச்சிக்கு நிலமானவிடங்களில் சிறிது ஆராய்ச்சி செய்வோமாயின் அங்கும் பேதவுணர்ச்சிதான் ஊர்ஜிதமாகுமென்பதை இனி எளிதாக நெஞ்சிற் பதியவைக்கிறோம். சூரனைவொருவனைச் சிங்கமென்றால் சிங்கமும் அவனும் ஒரு வ்யக்தியாக ஆய்விட முடியுமா? சிங்கத்தின் உருவமோ, அதற்கு உணவு முதலியனவோ வேறுபட்டவை. சூரனுடையவைகள் அதனில் வேறுபட்டவை; இன்[illegible] கட்கூடாகக் காண்கிறோம். இங்ஙனமே, பிரமசாரியின் [illegible]வேறாகவும் நெருப்பின் தன்மை அதனில் வேறாகவும் [illegible] காணப்படுகிறது. இப்படியிருக்க இவற்றுக்கு அந்யோந்யம் அபேதம் எங்ஙனே பொருந்தும்? பொருந்துவதற்கு நியாய

183184

மில்லை. ஆனால் அபேதமான வார்த்தை உலகில் வழங்கி வருகிறதே யென்னில், அதன் கருத்தை நாம் எப்படி கிரஹிக்க வேணுமென்பதை புத்திமான்கள் விமர்சித்தால் எளிதிற் புலனாம். பிரமசாரி நெருப்பை யொத்தவன், சூரன் சிங்கத்தை யொத்தவன் என்பதாகவே அந்த வார்த்தைகளின் கருத்து தேறும். நெருப்பு எவ்வளவு சுத்தமானதோ அவ்வளவு சுத்தமானவன் பிரமசாரிஎன்றதாகும். சிங்கம் எப்படி பயங்கரமோ அப்படியே சூரன் பயங்கரன் என்றதாகும். இப்படியல்லது வேறு விதமான கருத்து ஒருவருடைய மனத்திலும் புகாது. ஆகவே அபேதமான வ்யவஹாரங்களிலும் பேதமே புலப்படுகிறதென்பதைக் கண்டறிந்தோம். 'தந்தையும் மகனும் ஒருவனே' என்றால், தந்தையைப்போன்றவன் மகன்; தந்தையின் சாயலாகவேயிருப்பவன்மகன் என்றதாகுமேயொழிய 'இரண்டு நபர் இல்லை, ஒரே நபர் தான்' என்றதாகாதென்பதை ஒவ்வொருவரும் அநுபவத்தாலறியலாம். ஆக உலகவழக்கைக் கொண்டு இங்ஙனம் அறுதியிட்ட பொருளை இனி நாம் சாஸ்திரங்களாலும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளலாம். உலக வழக்கு வேறு, சாஸ்த்ர வழக்கு வேறு என்று நினைக்கவேண்டா. சாஸ்த்ரம் வழங்குவது போலவே நாம் வழங்கிவருகிறோம். நாம் வழங்கிவருவது போலவே சாஸ்த்ரம் வழங்கிவருகின்றது.

உபநிஷத்துக்களையே சாஸ்த்ரமென்கிறோம். அவற்றில் அநேக விடங்களில் பேதவ்யவஹாரமும் சிலவிடங்களில் அபேத வ்யவஹாரமும் காண்பதுண்டு. தைத்திரீய உபநிஷத்தில், வருண புத்திரரான ப்ருகு வென்பவர் தமது தந்தையான வருண பகவானிடம் சென்று, எனக்கு ப்ரம்மத்தைப்பற்றி உபதேசிக்க வேணுமென்று கேட்க, அவர் உபதேசித்த வரலாறு ஓதப்பட்டிருக்கின்றது; அந்த வாக்கியம் வருமாறு;—

"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே;
யேந ஜாதாநி ஜீவந்தி;
யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி... தத்ப்ரஹ்ம".

என்றுள்ளது. இதன் பொருளாவது, நாம் கண்ணாற் காணும் பொருள்களெல்லாம் எதனிடமிருந்து உண்டாகின்றனவோ, உண்டான பொருள்களெல்லாம் எதனால் பிழைக்கின்றனவோ, முடிவில் எல்லாம் எதையடைந்து லயம் பெறுகின்றனவோ அதுதான் ப்ரஹ்மம் என்பதாம். மேலே குறித்த மூன்று வாக்கியங்களுள் முதல் வாக்கியத்தில் ஐந்தாம் வேற்றுமையும், இரண்டாம் வாக்யத்தில் மூன்றாம் வேற்றுமையும், மூன்றாம் வாக்கியத்தில் இரண்டாம் வேற்றுமையுமுள்ளன. முதல் வேற்றுமையானது மூன்று வாக்கியங்களிலுமுள்ளது. இப்படிப்பட்ட வாக்கிய அமைப்பினால் பேதவுணர்ச்சி நன்கு ஏற்படுகிறது. சராசரங்களெல்லாம் பரப்ரம்மத்தினிடமிருந்து தோன்றியவை; பரப்ரம்மத்தினால் காக்கப்படுமவை; பரப்ரம்மத்தையே அடைந்து லயிக்குமவை என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதனால் சேதநாசேதநங்களான பொருள்கள் வேறாகவும், இவற்றுக்கு இறைவனான பரம்பொருள் வேறாகவும் அறுதியிடப்படக் குறையில்லை.

133184.

இப்படி பேதவுணர்ச்சியை யுண்டாக்கும் வாக்கியங்கள் போலவே அபேதவுணர்ச்சியை யுண்டாக்கும் வாக்கியங்களும் அவ்விடத்திலேயே இருக்கின்றன. "ஸோகாமயத ; பஹு ஸ்யாம் ப்ராஜாயேயேதி" என்கிற வாக்யங்களும் அவ்விடத்திலேயே ப்ரஸித்தமானவை. 'நானே பல பொருள்களாக ஆகக்கடவேன் ; நானே பிறக்கக்கடவேன்' என்று பரமபுருஷன் ஸங்கல்பம் செய்து கொண்டதாக மேலே குறித்த வாக்யங்களில் சொல்லப்படுகிறது. இங்கு முதல் வேற்றுமை தவிர வேறு வேற்றுமை எதுவும் இல்லாமையினால் அபேதவுணர்ச்சி தடையற்றிருக்கின்றது. எவ்வகைக்குற்றமுமற்றதான வேதமானது ஒன்றோடொன்று முரண்படக்கூடிய [பரஸ்பர விருத்தங்களான] அர்த்தங்களைத் தெரிவிக்கமாட்டாது. சிலவிடங்களில் பேதத்தைத் தெரிவித்தும் மற்றுஞ்சிலவிடங்களில் அபேதத்தைத் தெரிவித்தும் போந்தால் வேதபுருஷனுக்கே ஒரு நிச்சயஞானமில்லையோவென்று சிலர் நினைக்க நேருகின்றதே யென்கிறார்கள். அத்வைதிகளென்கிற வகுப்பைச்சேர்ந்தவர்கள் அபேதவுணர்ச்சியை யுண்டாக்கும் வேதப்பகுதிகளையேமுக்கியமாகக்கொண்டு அத்வைதக்கொள்கையைப் பரப்பிவைத்தார்கள். த்வைதிகளென்கிற மாத்வஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் பேதவுணர்ச்சியையுண்டாக்கும் வேதப்பகுதிகளையே முக்கியமாகக்கொண்டு த்வைதக்கொள்கையைப் பிரசாரம் செய்தார்கள். [அத்வைதமென்றால் அபேதம்; த்வைதமென்றால் பேதம். அபேதவாதிகளை அத்வைதிகளென்றும், பேதவாதிகளை த்வைதிகளென்றும் வழங்குகிறோம்.] அத்வைதிகளுக்கு பேதவுணர்ச்சியையுண்டாக்கும் வேதப்பகுதிகள் ஒதுக்கப்படவேண்டியவையாகின்றன. த்வைதிகளுக்கு அபேதவுணர்ச்சியையுண்டாக்கும் வேதப்பகுதிகள் ஒதுக்கப்படவேண்டியவையாகின்றன.

இனி நம்மாழ்வாருடைய திருவுள்ளம் வேதவாக்கியங்களில் எதையும் ஒதுக்கக்கூடாதென்பதே. இருவகுப்பான வேதவாக்கியங்களையும் உலகவியற்கையின்படி அழகாகப் பொருந்தவைக்கலாமென்பது நம்மாழ்வாருடைய திருவுள்ளம். இப்பாட்டில் பதப்பிரயோகங்களை ஊன்றி நோக்கினால் நற்றெளிவு உண்டாகும். "திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை படர்பொருள் முழுவதுமாய்" என்றதனாலே அத்வைதத்தை முன்னம் காட்டிவிட்டார். பஞ்சபூதங்களினின்று படர்ந்த பொருள்கள் யர்வும் எம்பெருமானே—என்பதான அர்த்தம் 'படர்பொருள் முழுவதுமாய்' என்கிற சொற்றொடரால் உணர்த்தப்பட்டதல்லவா? இது, நாம் முன்னே காட்டிய "ஸோகாமயத ; பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி" என்ற உபநிஷத்தின் சாயையிலே அமைந்தது.

அந்த உபநிஷத்துத்தான் அபேதமாக ஏன் சொல்லிற்று? என்னில் ; உலகில் தோன்றும் காரியப்பொருள்களுக்கெல்லாம் மூவகைக் காரணங்கள் வேண்டியிருக்கின்றன: உபாதானகாரணம், நிமித்த காரணம், ஸஹகாரிகாரணம் எனவாம். மட்குடமுண்டாவதற்கு மண்ணுண்டை உபாதான காரணம் ; குயவன் நிமித்த காரணம்;சக்கரம் தடி தண்ணீர்முதலியன ஸஹகாரிகாரணம். இப்படியே எல்லாக் காரியப்பொருள்களுக்கும் மூவகைக்காரணங்கள்

தேறும்படியைக் கண்டுகொள்க. இங்ஙனமே அசேஷப்ரபஞ்சங்களுக்கும் பகவான் காரணபூதன் என்னும்போது, மூவகைக் காரணமும் பகவானேயென்பது வேதாந்திகளின்கொள்கை. உபாதாந காரணமும் பகவானே யென்றதாயிற்று. மட்குடத்திற்கு உபாதான காரணமான மண்ணுண்டையானது காரியப்பொருளிற் காட்டிலும் அவஸ்தையினால் வாசி பெற்றிருக்கிறதேயொழிய வேறில்லையே; இந்த த்ருஷ்டியுடன் பார்க்கும்போது அபேதம் பொருந்தக் குறையில்லையன்றோ.

இங்கு "படர்பொருள் முழுவதுமாய்" என்ற சொற்றொடரால் உபாதாந காரணத்வமடியான அபேதத்தையுணர்த்திய ஆழ்வார்தாமே உடனே "அவையவைதொறும் கரந்து எங்கும் பரந்துளன்" என்பதனால் இயற்கையான பேதவுணர்ச்சியையும் உண்டாக்கியிருக்கின்றார். "எல்லாப்பொருளும் தானேயாய் நிற்கின்றான்" என்று முன்னே சொன்னவளவோடு நில்லாமல் "அவையவை தோறும் கரந்து பரந்து உளன்" என்றும் சொன்னதனால் பேதமும் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாகிறது. 'பொன்னன் வீட்டிலேயுளன்' 'கள்ளன் காட்டிலேயுளன்' என்று சொன்னால், பொன்னனிற் காட்டிலும் வேறுபட்டது வீடு—என்றும், கள்ளனிற் காட்டிலும் வேறுபட்டது காடு என்றும் தெரிந்துகொள்வதில் அருமையில்லையே. "அவையவை தொறுமுளன்" என்றதனால் அபேதத்திற்கு எதிரான பேதம் தெரிவிக்கப்பட்டதாயிற்று என்பதில் ஐயமில்லை.

இனி நாம் ஆலோசிக்க வேண்டியது என்ன வென்றால் அபேதமும் பேதமும் எப்படிக் கூடும்? என்று. இதைப்பற்றின தெளிவை ஆழ்வார் எங்ஙனம் பிறப்பிக்கிறாரென்பதை உற்று நோக்குமின்;—மூன்றாமடியில் "உடன்மிசை உயிரென" என்றருளியிருக்கின்றாரே, இதுதான் விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு உயிரான வார்த்தை. 'உடன்மிசை உயிரென' என்பதற்கு உடலிலே உயிரிருப்பதுபோல, என்று பொருள். நாம் உடலைக் கண்ணால் பார்க்கிறோமேயல்லது உயிரை ஒருகாலும் பார்க்கின்றிலோம். ஆனாலும் உடலிற்காட்டிலும் வேறுபட்டதாய் உயிர் உண்டென்பதை நாம் ஒரு ஸமயவிசேஷத்திலே தெரிந்துகொள்ளுகிறோம்; இந்த வுடலானது ஒருநாள் 'ப்ரேதம்' என்னும் படியான நிலைமையை எய்துகின்றது. அப்போது இவ்வுடல் ஒன்றும் செய்யமாட்டாது விழுந்து கிடக்கின்றது. அதைக்கண்டு நாம் 'இதுவரை இவ்வுடலில் உயிரிருந்தது' என்றும் 'இப்போது அவ்வுயிர் வெளியேறி விட்டது' என்றும் தெரிந்துகொள்ளுகிறோம். ஆகவே, உயிரே உடல் என்றாவது, உடலே உயிர் என்றாவது கொள்ளுவதற்கு இடமில்லை. இரண்டும் தனித்தனியே இருபொருள்கள் என்கிற உணர்ச்சி பிராமாணிகமாயிற்று. இங்ஙனம் தனிப்பட்ட இரண்டு வஸ்துக்களை நாம் ஒரு ஸமயத்தில் ஒரே வஸ்துவாகவும் மற்றொரு ஸமயத்தில் இரண்டுவஸ்துக்களாகவும் வழங்கி வருகிறோமென்பது அனுபவத்திற்கண்ட விஷயம்.

பொன்னன் என்கிற வொருநபரை யெடுத்துக்கொள்வோம். 'பொன்னன் சிவப்பானவன்' என்கிறோம்; 'பொன்னன் மேதாவி'

என்கிறோம். சிவப்பானவன் என்னும்போது பொன்னனென்கிற சொல்லானது உடலை நோக்குகின்றது; சிவப்போ கறுப்போ உயிர்க்கு இலதாய் உடலுக்கேயுளதாதலின். மேதாவியென்னும் போது பொன்னனென்கிற அச்சொல்லேஉயிரை நோக்குகின்றது; அறிவு உயிருக்கே யுரியதாய் உடலுக்கு அஸம்பாவிதமாதலால்.

ஆக இவ்வகையான உதாரணங்களினல் உடலைச் சொல்லும் சொல்லே உயிரையும் சொல்லி நிற்கிறது என்னும்படியான அபேதத்தையும், உடலுக்கும் உயிருக்கும் உண்மையிலுள்ள தான பேதத்தையும் தெரிந்து கொள்கிறோம். இதைத்தான் விசிஷ்டாத்வைதமென்பது. விசிஷ்டமென்பதற்கு ஒன்று சேர்ந்தது (அல்லது) ஒன்று கூடினது என்று பொருள். விசேஷணமும் விசேஷ்யமுமான இரண்டு பொருள்களை ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது ஒரே பொருளாகக் கொள்ளப்படுவதும், பிரித்துப் பார்க்கும்போது இரண்டு பொருளாகக் கொள்ளப்படுவதும் அபலாபம் செய்ய முடியாத விஷயம். உலகில் நாம் எந்த பதார்த்தத்தை யெடுத்துக்கொண்டாலும், விசிஷ்டமாகப் பார்க்கிறபோது ஒரே பதார்த்தமாய், பிரித்துப் பார்க்கிறபோது பல பதார்த்தங்களாய் இருக்குந் தன்மையை எங்கும் அநுபவத்திற் காண்கிறோம். உடலும் உயிரும் என்று இரண்டு கொள்ளாமல் உடலை மாத்திரமே கொண்டாலும், உடல் என்ன நின்றபொருள் ஒன்றேயாயினும், உடலுக்குள், தலை, கழுத்து. மார்பு, கை, கால், விரல் என்னப்படுமுறுப்புகள் பலவே. ஒரு கடியாரத்தை நாம் ஒரே பொருளாகக் கொண்டாலும் அதைச் செப்பனிடுவதற்குப் பிரிக்கும்போது பலபல சிறியவுறுப்புகளை அதனுட்காண்கிறோம். அவையெல்லாம் உண்மையில் தனித்தனி வஸ்துக்களேயல்லவா? அவற்றுக்கு நாமரூபங்கள் வெவ்வேறே. ஆனலும் அவை கடியாரத்திற்கு உறுப்பாகி ஒரே பெயரை யடைந்து நிற்பதையும் காண்கிறோம். "உடன்மிசை யுயிரென" என்னுமிப் பாசுரமானது இத்தனை நிதர்சனங்களையும் ஸஹிக்குமதாகி, அபேதமும் பேதமும் பொருந்துகிறபடியை எளிதாக வுணர்த்தித் தருகின்றது. ஸ்ரீராமாநுஜர் இப்பாசுரங்கொண்டே தெளிவுபெற்று, ஒன்றேடொன்று முரணபட்டனபோல் தோன்றுகின்ற வேதாந்த வாக்கியங்களையெல்லாம் ஸமன்வயப்படுத்தி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டினராயிற்று.

ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசார்யஸ்வாமியால் இயற்றப்பட்டு, ஜகன்மோகினி இதழ்களில் தொடர்ந்து வெளியாகி,

தனிப்புத்தகங்களாகப் பிரசுரமாகியுள்ள இரு ரத்தினங்கள்!

1. **ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமம்—**
பட்டர் பாஷ்யப்படி உரையுடன்.
(பாராயணத்திற்குகந்த பாக்கெட் ஸைஸ்) ரூ. 1.

2. **அபூர்வராமாயணம்—**
ராமகதாம்ருதத்தில் புதிய குணநுபவம்.
(160 பக்கம் 16 அத்யாயங்கள்) ரூ. 1-8.

சமயசஞ்சீவி

ஆபீஸிலிருந்து நான் வந்த உடனே என் சகதர்மிணியான ராஜியின் முகத்தை அப்பிடி ஒருதரம் பார்த்தபிறகு தான் காப்பியை சரியானபடி ருசிபார்த்து சாப்பிடுவது வழக்கம். ஏன் என்று கேட்கிறீர்களோ! நான் அதிகப் பணக்காரனில்லை. சொல்பமாய் மாதம் 200 ரூபாய் சம்பளமுடைய உத்யோகஸ்தன் தான். அதிகமாய்ப் பிச்சல்கள் இல்லை. நானும் என் ராஜியுந்தான் சர்வாதிகாரிகளாய் இருக்கிறோம். அவள் தடபுடல் நாகரீகப் பேர்வழிகளின் சிநேகிதை; மாதர் சங்கத்தில் ப்ரதானமெம்பர்; தினம் ஒரு பந்தாட்டம், தினம் ஒரு போட்டி, அந்த க்ளப்புடன்போட்டி, இந்த சங்கத்துடன் போட்டி என்று ஆட்டம் ஆடிஆடி தினம் ஒரு கப்பு பரிசு வாங்கிவந்து ஒரு கண்ணாடி பீரோவை நிறைத்துவிட்டாள். அம்மாதிரி ஆடுவதிலும் பரிசுகள் பெறுவதிலும் அவளுக்கு இருக்கும் ஆர்வமும் அலாதி இன்பமும் சொல்லிமுடியாது. அத்தகைய உத்ஸாகமான நாட்களில் காப்பியும் டிப்பனும் ஒன்றுக்குத்தரமாயிருக்கும். சாதாரண நாட்களில் ஒருமாதிரி தானிருக்கும்; அந்த ரகஸியத்தை அறிவதற்காகவே பார்ப்பேன். அதேபோலத்தான் அன்றும் அவள் முகத்தைப் பார்த்தேன். அடடாடடா! அந்த ஆநந்தத்தையும் உத்ஸாகத்துள்ளலையும் அளவிடவே முடியாததால் ஏதோ ப்ரம்மாண்டமான பந்தாட்டந்தான் என்று தெரிந்து விட்டது. டிப்பன் காப்பியின் ருசி எப்படி இருக்கும் என்பதை ஒருவாறு புரிந்து கொண்டு நாக்கைத் தீட்டி வைத்துக்கொண்டுவந்தேன்.

ராஜி கொடுத்த டிப்பன் காப்பியின் ஸ்வரூபத்தைப் பார்த்த உடனே முகம்சுருங்கியது. என்ன இருந்தாலும் ராஜி மகாகெட்டிக்காரியானதால் என் முகச்சாயலைத் தெரிந்து கொண்டு விட்டாள். ‘நாளைக் காலையில் என் தங்கை குழந்தைகளுடன் வருவதாகத் தந்தி வந்தது. வீட்டைச் சரிப்படுத்தவே நேரம் சரியாகி விட்டதால் ஓட்டலில் வரவழைத்து விட்டேன். நாளைக் காலையில் ஸ்டேஷனுக்குப்போய் அவர்களை அழைத்து வரவேணும்’ என்று அவள் முடிப்பதற்குள்ளேயே உண்மையில் என் சரீரமே நடுங்கிவிட்டது.

முன்பு 4 குழந்தைகளுடன் வந்து இருந்துவிட்டு என் குடும்பத்தையும் சாமான்களையும் ஹதம் செய்துவிட்டுப் போன பயங்கரம் என்னைத் திடுக்கிடச்செய்தது. அவளுடைய நாலு ரத்தினங்களான குழந்தைகளும் என்னிடம் முழுசாக இருந்த சாமான்கள் சிலவற்றை மூன்று நான்காகச் செய்து விட்டதில் 200 ரூபாய் ரிஸ்டு வாச்சு, மூக்குக் கண்ணாடி, காப்பிசாப்பிடும்

க்ளாஸ் ஸெட்டுப் பாத்திரங்கள், படங்கள், சுவற்றில் மாட்டும் கடியாரம், கண்ணாடி ஜன்னல்கள்...இதுபோல் பலபல. இது மட்டுமா! ஆபீஸ் கட்டுக்களைக் கிழித்து மழையில் கப்பல் வேறு விட்டுவிட்டார்கள் என்றால் என் கதி எப்படியிருக்கும் அப்போது நாலு மாணிக்கம்; இப்போது ஆறு ரத்தினங்கள்! இந்த நஷ்டத்துடனா விட்டது? கடன் என்கிற பெயரே இல்லாது வாழ்ந்த எனக்கு 300 ரூபாய் கடன். முதலியார் ஜவுளிக்கடை, மளிகைக்கடை, வெள்ளிப் பாத்திரக்கடை... இப்படியாக ஏறிஏறி என் தலையே மொட்டையாகிவிட்டது.

ராஜியிடம் கேட்டதற்கு,' ஆமாம் நாம்தான்பிள்ளைகுட்டி பெறாது கல்லாக இருக்கிறோம்; குளுகுளுவென்று நாலு குழந்தைகளுடன் அவள் நன்றாக இருந்து போனாள். இந்த சொத்தை என்னதான் செய்யப்போகிறோம்; என்று ஒரே போடு போட்டுவிட்டாள். அதற்குமேல் விதி என்று முடிப்பதுதான் வழக்கமாயிற்றே!

இந்த முறை தங்கை வந்தால் திவால்தான் என்றுஎனக்குப் பட்டுவிட்டது.எனக்குக் காப்பிகூட பிடிக்கவில்லை.சடக்கென்று ஒருயோசனை தோன்றியது; துணிந்துவிட்டேன்!...அடடா! உன் தங்கை வருவதுபற்றி மிக்க சந்தோஷந்தான்; ஆனால் நாம் இன்றிரவே புறப்படவேணுமே, என்னை அவஸரட்யூட்டியாக ஒருமாதகாலம் ஊட்டிக்கு மாத்தி இருக்கிறார்கள்; நான் வீட்டுகூட புக்பண்ணிவிட்டு வந்துவிட்டேன். உன் தங்கை வந்தால் இங்கு வீட்டில் இருக்கட்டும்; நீ வெகுநாளாக ஆசைப்பட்ட ஊருக்கு மாற்றியதுபற்றி நான் சந்தோஷப்பட்டுக் கொண்டுவந்தேன்; உடனே ப்ரயாணத்திற்குத் தயார்செய்... என்றேன்.

மறுபேச்சின்றி தங்கைக்கு ஒரு மாதங்கழித்து வரும்படி தந்தியடித்துவிட்டாள்.நான் குஷியாக ப்ரயாணத்திற்குத் தயாராவதுபோல் நடித்துவிட்டு, வேண்டுமென்று வழுக்கிவிழுந்தது போலவும் நடித்து, அடிபட்டவன்போல அபாரமான நாடகம் போட்டு ப்ரயாணம் அதனால் நின்றுவிட்டதுபோல் ஒருகதைபண்ணிவிட்டேன்.

ராஜிக்குபாவம் உண்மைதெரியாது:''ஊட்டியும்வேண்டாம், பாட்டியும்வேண்டாம்! உங்களுக்கு உடம்பு சரியானால்போதும். பேசாமல் ஒருமாதம் லீவு எடுத்துக் கொள்ளுங்கள்; நாமே க்ராமத்திற்குப்போய் உடம்பை நன்றாகக் கவனித்துக் கொண்டுவரலாம் என்றாள் ; இனி கேட்கவேண்டுமோ எனது சந்தோஷத்திற்கு.

❋

எங்கள் வீட்டில் ரேடியோ

(கே. நாராயணன்)

○

எங்கள் வீட்டில் எல்லோருக்கும் வெகு நாளாகவே ஒரு ரேடியோ வாங்கவேண்டுமென்று ஆசை. எனக்கும் இந்த ஆசை இருந்தபோதிலும், ரேடியோ வாங்குவதனால் என்னவெல்லாம் தொந்தரவுகள் ஏற்படுமோ என்று நினைக்கும்போது பயமாகத் தான் இருந்தது. ரேடியோ இல்லாதிருக்கும்போதே எங்கள் வீட்டில் எப்போதும் ஒரே களேபரமாக இருக்கும். ரேடியோ வேறு வந்துவிட்டால்......? துரதிருஷ்டவசமாக (அல்லது அதிருஷ்ட வசமாக) எங்கள் பொருளாதார நிலைமை ரேடியோ வாங்கக்கூடிய அளவுக்கு நன்றாக இருக்கவில்லை. ஆகவே ரேடியோ வாங்கும் ஆசை ஆசையாகவே இருந்துவந்தது.

திடீரென்று ஒரு நாள் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது. அப்பாவுக்கு ஏதோ ஒரு போட்டியில் 500 ரூ. பரிசு விழுந்தது. அப்பா இருபது வருடங்களாக போட்டிகளுக்கு அனுப்பி வருகிறார். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று சிறுகச் சிறுகப் பிரவேசக்கட்டணம் மட்டுமே இதுவரை சுமார் ஆயிரம் ரூபாய் ஆகியிருக்கும். ஆனால் இதுவரை பரிசின் வாசனைகூட அருகில் வந்ததில்லை. அப்பாவுக்குத் தன் புத்திகூர்மையைப்பற்றி மிகப் பெருமை. போட்டிகளுக்கு அனுப்புமுன் நண்பர்களுடன் அதன் விடைகளைப்பற்றி காரசாரமாகத் தர்க்கம் செய்வார். தான் கூறும் விடைதான் பொருத்தமானது என்றும் மற்றவர்கள் கூறுவதெல்லாம் பொருத்தமற்றது என்றும் வாதிப்பார். "இதற்கெல்லாம் விசேஷ நுண்ணறிவு வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார். ஆனால் கடைசியில் போட்டியின் முடிவு வரும்போது அவர் விடையில் குறைந்த பட்சம் ஐந்து தவறுகள் இருக்கும். அப்போது ஒன்றுமே பேசமாட்டார். அவருடைய "விசேஷ நுண்ணறிவு" என்ன ஆயிற்று என்று கேட்க நண்பர்களுக்குத் தோன்றியபோதிலும் கேட்கமாட்டார்கள். ஏனென்றால், அப்பாவுக்கு மிகக்கோபம் வந்துவிடும். ஆனால் இப்படி அவர்கள் கேட்காமல் விட்டபோதிலும் அப்பாவின் வழக்கம்மட்டும் மாறவில்லை. திரும்பவும் அடுத்த போட்டியின் விடைகளைப்பற்றி விவாதம் செய்யும்போது தன் "விசேஷ நுண்ணறி"வைப்பற்றிய பெருமைதான்!

ஆனால் கடைசியில் 500 ரூ. பரிசு விழுந்தேவிட்டது. எல்லோருக்கும் ஒரே குதூகலம். எனக்குந்தான். ஆனாலும் கணித மனப்பான்மை படைத்த எனக்கு இருபது வருடமாகப் போட்டிகளுக்கு அனுப்பாமலே இருந்திருந்தால் சுமார் ஆயிரம் ரூ. சேர்த்திருக்கலாமே என்றே தோன்றியது. அது நிற்க.

பரிசு விழுந்ததுமே ரேடியோ வாங்கவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மிகத்தேவையான வேறு அநேக சாமான்கள் வாங்கவேண்டியிருக்கும்போது ரேடியோவில்கொண்டு அவ்வளவு ரூபாயையும் கொட்டுவதா என்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் அப்பா, அம்மா, அக்கா, அண்ணாக்கள், மதினிகள்,

மருமான் இவ்வளவுபெரும் ரேடியோ வாங்கும் திட்டத்திற்குச் சாதகமாக இருக்கும்போது நான் மாத்திரம் எதிர்த்து என்ன பிரயோசனம்? இவர்களுடைய தாக்குதலுக்கு முன்னால் நான் எம்மாத்திரம்? ஆகவே வேறு வழியின்றி நானும் என்னுடைய 'வோட்'டைக் கொடுக்கவேண்டியதாயிற்று.

ரேடியோ வாங்கவேண்டுமென்று தீர்மானித்தாயிற்று. ஆனால் என்ன ரேடியோ வாங்குவது? ஒவ்வொருவர் ஒவ்வொரு ரேடியோவின் பெயரைச் சொன்னார்கள். ஆனால் அப்பா அவைகளில் ஒன்றையுமே வாங்காமல் தன் "விசேஷ நுண்ணறிவு"க்கெட்டிய படி ஏதோ ஒரு ரேடியோவை வாங்கிவந்தார். ஒவ்வொருவருக்கும் தான் கூறிய ரேடியோ வாங்கவில்லையே என்ற வருத்தம் இருந்த போதிலும் அதைவிட மற்றவர்களின் அபிப்பிராயமும் பொருட் படுத்தப்படவில்லை என்பதானது அதிக மகிழ்ச்சியை அளித்தது.

பிறகு ரேடியோவை எந்த அறையில் வைப்பது, எப்படி வைப்பது என்பதுபற்றி விவாதங்கள் எழுந்தன. கடைசியில் என் அறையில் வைப்பதாகத்தீர்மானிக்கப்பட்டது. (அப்போது தானே எனக்கு நிம்மதியாகப் படிக்கவும் எழுதவும் சௌகரியமாக இருக்கும்!)

ரேடியோ வந்தபிறகு ஒன்றிரண்டு மாதத்திற்கு நான்பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல. ரேடியோ எங்களுக்குக் கேட்ப தற்காக வாங்கப்பட்டபோதிலும் ஊரிலுள்ள அனைவர்களுக்குமாக வாங்கப்பட்டிருக்கிறது என்று அண்ணா கருதினான்போலும்! தன்னுடைய நண்பர்களெல்லாரையும் அதைப்பார்க்கக் கூட்டிக் கொண்டு வரத்தொடங்கினான். சில சமயம் தனித்தனியாகவும் சில சமயம் ஒரே கும்பலாகவும் நண்பர்கள் எங்கள் வீட்டைப் படை எடுக்கத்தொடங்கினர். "நண்பர்கள்" என்றால் நன்றாகத் தெரிந்தவர்களாகவே இருக்கவேண்டுமென்பதில்லை. அண்ணாவைப் பொறுத்தவரையில் என்றோ ஒரு நாள் சினிமாக்கொட்டகையில் அடுத்த 'ஸீட்'டில் உட்கார்ந்து படம்பார்த்தவனும் நண்பன் தான்.

காலை எட்டு மணி இருக்கும். நான் என் அறையில் உட் கார்ந்துகொண்டு பரீக்ஷைக்காகப் படித்துக்கொண்டிருந்தேன். பரீக்ஷைக்கு ஒரு வாரம்தான் இருந்தது. மிக சிரமத்துடன் பாடங்களை மூளையில் ஏற்ற நான் முயற்சித்துக்கொண்டிருக்கும் போதே அண்ணா சில நண்பர்களுடன் உள்ளே வந்தான். "இது தான் நாங்கள் வாங்கிய ரேடியோ. ஆறு 'வால்வ்'......'பாண்ட்ஸ் ப்ரெட்'...'மாஜிக் ஐ' இருக்கிறது...நல்ல 'ரிஸெப்ஷன்'. பி. பி. ஸி. கேட்கிறீர்களா?...500 ரூ. விலை. எங்களுக்காக 450 ரூபாய்க்குத் தந்தான். கம்பெனிக்காரனுக்கு அப்பாவை நன்றாகத் தெரியும். (தெரியுமானால் அதற்காகக் குறைந்த ரூபாய்க்குவிற்றுவிடுவானா? உண்மை என்னவென்றால் கம்பெனிக்காரன் எல்லாரிடமுமே இப் படித்தான் சொல்லிவந்தான்— "500 ரூபாய்தான் அசல்விலை, ஆனா, உங்ககிட்ட அவ்வளவு கராராக இருப்பேனா? இன்னிக்கு நேத்திக்கி சிநேகமா? 450-க்கு எடுத்துக்கிட்டுப்போங்க." அப் பாவோ தன்னிடமுள்ள விசேஷ நட்பினால்தான் இந்தச் சலுகை யை நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தார்.)......நல்ல

'காபினெட்'... இல்லையா?... எந்த ஸ்டேஷன் கேட்கிறீர்கள்? இப்படி ரேடியோ 'ஸேல்ஸ்மா'னைப்போல அண்ணா தொடர்ந்தாப்போல் பேசிக்கொண்டே போனான். நண்பர்களும் பல கேள்விகள் கேட்டுக்கொண்டே ரேடியோவை இப்படியும் அப்படியுமாகப் பார்த்து பரிசோதனை செய்யத்தொடங்கினார்கள். ஒருவர் 'ஸ்விச்'சைப் போட்டார். மற்றொருவர் 'டயல் நா'பைத்திருப்பினார். வேறொருவர் ரேடியோவை இங்குமங்கும் தட்டிப்பார்த்தார்—மாடு வாங்குவதற்குமுன் அதைப் பரிசோதிப்பதுபோல. பிறகு கேள்விமாரி தொடங்கிற்று. அண்ணா ஏற்கனவே விளக்கிவிட்ட விஷயங்களைப் பற்றித்திரும்பத்திரும்பக் கேட்டார்கள். அண்ணாவும் பதில் சொல்லிக்கொண்டே வந்தான். இப்படியாக ஒரு மணி நேரம் சென்றது. "எனக்குப்படிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே அப்புறம் வருகிறீர்களா?" என்று அவர்களிடம் சொல்லமுடியுமா? ஆகவே மிகக்கஷ்டத்துடன் பொறுத்துக்கொண்டிருந்தேன். சுமார் இரண்டு மணி நோத்திற்குப்பிறகு அவர்கள் ஒரு வழியாக விடைபெற்றுக்கொண்டு போனார்கள்.

'அப்பாடா!' இனிமேலாவது நிம்மதியாகப்படிக்கலாமென்றெண்ணிப் புத்தகத்தைக் கையில் எடுத்தேன். அதே சமயத்தில் என் மருமான் தன் சிநேகிதர்களுடன் வந்து சேர்ந்தான். "மாமா, இன்னிக்கு கிரிக்கெட் 'ரன்னிங் கமென்டரி' உண்டு" என்று சொல்லிக்கொண்டே ரேடியோவைத்திருப்பினான். சிறுபையன்கள் மிக ஆவலுடன் கேட்கவந்திருக்கிறார்கள். அவர்களைக்கடிந்து கொள்ள மனம்வரவில்லை. ஆகவே நான் வேறு அறைக்குச் சென்று படிக்கத்தொடங்கினேன்.

ஆயிற்று; பரீக்ஷை முடிந்தது. இனிமேல் நானும் கொஞ்சம் நிம்மதியாக ரேடியோ கேட்கலாம் என்றெண்ணினேன். ஆனால் அதுவும் நடக்கவில்லை. எனக்குக் கர்நாடக சங்கீதம் கேட்பதில் மிக விருப்பம்; அண்ணா நெ. 1-க்கு ஹிந்தி டாக்கிப்பாட்டுகள்; அப்பாவுக்குப் பிரசங்கங்கள்; அக்காவுக்கும் மதனிகளுக்கும் நாடகங்கள்; அண்ணா நெ. 2-க்கு ஆங்கிலேய சங்கீதம்; மருமானுக்குக் கிரிக்கெட். இப்படியாக 'லோகோ பின்னருசி:' என்ற கூற்றை உண்மையாக்குவதற்காகவே எங்கள் குடும்பம் உண்டாயிற்றோ என்று தோன்றிற்று. அருமையான கர்நாடக சங்கீதக் கச்சேரியைத் திருப்பி வைத்திருப்பேன். அண்ணா நெ. 1 வந்து டாக்கிப் பாட்டுகள் இருக்கும் ஸ்டேஷனுக்கு மாற்றிவிடுவான். கொஞ்ச நேரம் கழித்து அப்பா வந்து அவருக்கிஷ்டமான ஸ்டேஷனைத் திருப்புவார். அம்மாவோ "இந்த ரேடியோவில் ஒரு கதையா, புராணமா ஒன்றும் கிடையாதா? எப்போது பார்த்தாலும் என்ன பிரசங்கம் வேண்டிக்கிடக்கு?" என்று தானே ஒரு பிரசங்கம் செய்யத்தொடங்கிவிடுவாள்! அக்காவுக்கும் மதனிகளுக்கும் நாடகம் கேட்கமுடியவில்லையே என்ற குறைதான். இப்படியாக எனக்கு ஒரு நாளாவது விரும்பிய நிகழ்ச்சியைக் கேட்டு ரஸிக்க முடியவில்லை.

ஒருநாள் வீட்டில் எல்லோரும் சினிமாவுக்குப்போயிருந்தார்கள். இன்றாவது நிம்மதியாகப் பாட்டுக்கேட்கலாம் என்று நினைத்து ரேடியோவைத் திருப்பினேன். நகரத்தில் நடந்துகொண்டிருந்த

சங்கீத விழாவில் ஒரு வித்வானின் சச்சேரியிலிருந்து சில பகுதிகளை ஒலிபரப்பிக்கொண்டிருந்தார்கள். நான் மிக ஆனந்தத்துடன் கேட்கத்தொடங்கினேன். இந்த சமயத்தில் வந்தாரய்யா அடுத்த வீட்டு சுந்தரமய்யர்! வரும்போதே, "யாரு, வெங்கிடாச்சாரியா பாடறது?" என்று ஒரு கேள்வியையும் போட்டுக்கொண்டேதான் வந்தார்!

இந்த சுந்தரமய்யர் ஒரு பெரிய 'க்ரிடிக்'. இவர் யாருடைய சங்கீதத்தையும் இதுவரை பாராட்டியதில்லை. எந்த இளம் வித்வான் எவ்வளவுதான் உழைத்துப்பாடியபோதிலும் சரி, இவர் சொல்வார்—"இதெல்லாம் என்ன பாட்டு? பாட்டுக்கேட்பதானல் கிருஷ்ணபுரம் கிட்டாவய்யர் பாடிக் கேட்கவேண்டும். மற்றதெல்லாம் பாட்டா?" மேற்படி கிருஷ்ணபுரம் கிட்டாவய்யர் இறந்து அநேக வருடங்களாகிவிட்டன. இனிமேல் அவருடைய பாட்டைக் கேட்பதென்னவோ முடியாத காரியம். அதைப்பற்றி வருந்தி என்ன பயன்? ஆனாலும் இவர் வருந்திக்கொண்டேதான் இருப்பார். சச்சேரியைத் தானும் ரஸிக்கமாட்டார்; பிறரையும் ரஸிக்கச் சம்மதிக்கமாட்டார். சங்கீதம், இலக்கியம், அரசியல் முதலிய எந்த விஷயமானாலும் சரி, தன்னைப்போலத் தெரிந்தவர்கள் யாருமே கிடையாது என்பது இவர் எண்ணம். இவ்வளவு தெரிந்திருந்தபோதும் இவர் எப்போதும் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருப்பார். சில சமயம் இவரது கேள்விகளுக்கு முடிவே இராது. பதில் சொல்பவர்களுக்குச் சலிப்புத்தட்டிப்போகும். ஆயினும் வயதில் பெரியவரல்லவா? ஆகவே கடிந்து கூற முடியாது. எல்லையற்ற பொறுமைக்கடலாக விளங்கவேண்டியதுதான்!

நான் கூறினேன்:—இது வெங்கிடாச்சாரியல்ல; ஜகந்நாதய்யர்.

சுந்தரமய்யர்:—ஓஹோ! ஜகந்நாதய்யரா! ஆமாம், சொன்னாப் போலே: ஜகந்நாதய்யர்னு இன்னிக்கி!(யார் சொன்னாப்போலேயோ, பகவானுக்குத்தான் வெளிச்சம்!) சங்கீத வித்வத்சபைக் கச்சேரியோ?

நான்:—இல்லை.

சுந்:—தமிழ் இசைச்சங்கமோ?

நான்:—அதுவும் இல்லை. இது பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டிக் கச்சேரி.

சுந்:—ஆமாம், ஆமாம். பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டின்னு! திருச்சி ஸ்டேஷன்தானே வைத்திருக்கிறாய்? அதுதான் நன்றாகக் கேட்கிறது.

நான்:—இல்லையே. இது மதராஸ்.

சுந்:—ஓ! எஸ்! எஸ்! ஐ மென்ட் மட்ராஸ்! (எப்படியிருக்கிறது விஷயம்? இவர் 'திருச்சி' என்று சொல்வாராம். 'மதராஸ்' என்று சொல்வதற்கு பதிலாக அப்படிச் சொல்லிவிட்டார் என்று நான் எடுத்துக்கொள்ளவேண்டும்!) என்ன 'மீட்டர் பாண்'டில் வைத்திருக்கிறாய்? 31-ல் தானே?

நான்:—இப்போது 31? 60-ல் வைத்திருக்கிறேன்.

சுந்:—41-ல் கிடைக்குமில்லையோ?

எனக்கு எரிச்சலாக இருந்தது. மனுஷருக்கு இந்த விவரமெல்லாம் தெரிந்துகொள்ளாமல் பாட்டைக்கேட்கமுடியாதோ?

ஆனல் அவர் பாட்டுக்கேட்கவா வந்திருக்கிருர்? என் உயிரை வாங்க அல்லவா வந்திருக்கிருர்! சுந்தரமய்யர் பேசிக்கொண்டே இருந்தார். அடிக்கடி, சுருதி சேரவில்லையே! காலப்பிரமாண சுத்தம்போதாது, "காந்தாரம் குறைகிறது", என்று தன் அபிப் பிராயங்களை தாராளமாக வெளியிட்டு வந்தார். நான் பொறுமை இழந்தேன். ஆயினும் கோபமாக ஒன்றும் கூறிவிடவில்லை. பேசாமலிருந்தேன்.

சுந்தரமய்யர் தொடர்ந்தார்—இது 'ரிலே' தானே?

நான்:—இல்லை; ஒலிப்பதிவு.

சுந்:—என்று நடந்த கச்சேரி? எத்தனை மணிக்கு நடந்தது?

நான்:—இது முந்தாநாள் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியில் மாலை 5-30க்குநடந்தஜகந்நாதய்யருடைய கச்சேரியின் ஒலிப்பதிவு.

சுந்:—பின்னே வெங்கிடாச்சாரின்னு போட்டிருந்ததே?

நான்:—எங்கே போட்டிருந்தது?

சுந்:—நேத்திக்கிப்பேப்பர்லே—இல்லை, முந்தா நேத்திக்கிப் பேப்பர் போலிருக்கு,

நான்:—அது வேறு வெங்கிடச்சாரி. நேற்றிரவு 9–30க்கு சங்கீதவித்வத்சபையில் பாடப்போவதாகப் போட்டிருந்தது. அதை நேற்றே 'ரிலே' செய்து விட்டார்கள். அப்படியானல் வெங்கிடாச்சாரி பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியில் பாடவில்லையோ என்று கேட்காதீர்கள். அவர் அங்கே நாலு நாட்களுக்கு முன்னுலேயே பாடியாயிற்று. ஜகந்நாதய்யரும் சங்கீத வித்வத் சபையில் பாடியாயிற்று. இருவரும் தமிழிசைச் சங்கத்திலும் பாடுவார்கள். அந்தக் கச்சேரிகளின் ஒலிப்பதிவுகளும் என்றைக் காவது வைப்பார்கள். இப்போது கேட்கும் கச்சேரியில் பக்க வாத்தியங்கள்—கந்தசாமி—வயலின், அய்யாவய்யர்–மிருதங்கம், கோண்டு—கடம்; பாட்டு—"தியாகராஜாய நமஸ்தே"; ராகம்—பியாகடை; தாளம்—ரூபகம்; தீக்ஷிதர் கிருதி. போதுமா? இன்னும் ஏதாவது தெரியவேண்டுமா?

சுந்தரமய்யருக்கு என்னமோபோல் ஆகிவிட்டது. ஆயினும் சமாளித்துக்கொண்டு "சரி, வருகிறேன். நேரமாகிவிட்டது" என்று சொல்லிக்கொண்டே கிளம்பினுர். போகும்போது "இன்று வெள்ளிக்கிழமைதானே?" என்று கேட்டுக்கொண்டேதான் போனுர்!

இதற்குள் சினிமாவுக்குச் சென்றவர்கள் திரும்ப வந்து விட்டார்கள். அப்புறம் பழைய கதைதான்.

மற்றொரு நாள் சாயந்திரம் காலேஜிலிருந்து வந்தவுடன் ஒரு முக்கியமான நிகழ்ச்சியைக்கேட்பதற்காக ஆவலுடன் ரேடியோ வைத்திருப்பினேன். ரேடியோ வேலைசெய்யவில்லை. பரிசோதித்துப் பார்த்தபொழுது ஒரு 'வால்வ்' எரிந்துபோயிருந்தது. மருமான் மத்தியானம் தொடர்ச்சியாக நான்கு மணிநேரம் ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தான் என்று பின்னர் தெரியவந்தது. அழவேண்டியதை அழுதுவிட்டு ரிப்பேர்செய்துகொண்டு வந்தோம்!

சில நாட்களுக்குள் ரேடியோவில் கோளாறுகள் ஆரம்பித்தன. 'டயல்' கயிறு அறுந்துவிட்டது. ரிப்பேர் செய்தோம். ஆனால் பிறகு எந்த ஸ்டேஷனும் அதன் சரியான இடத்திலிருந்து இரண்டு அங்குலம் தள்ளிவைத்தால்தான் கிடைக்கும் என்று ஆகிவிட்டது. சில சமயம் ரேடியோவிலிருந்து ஒரே குமுறல் மாத்திரம்தான் கேட்கும். முதலில் இதெல்லாம் 'அட்மாஸ்பெரிக்ஸ்' என்று சொல்லி எங்களையே சமாதானம் செய்துகொண்டோம். ஆனால் சீக்கிரமே தெரிந்துபோய்விட்டது—இந்த ரேடியோவில் இனிமேல் இந்தக் குமுறலைத்தவிர வேறொன்றும் கேட்கமுடியாதென்று. திரும்பவும் ரிப்பேர் செய்யலாமென்று நினைத்தோம். ஆனால் ரிப்பேர் சார்ஜை கேட்டவுடன் அப்படியே அசந்துபோய் விட்டோம். இப்படி ஐந்தாறு தடவைகொடுக்கும் ரிப்பேர் சார்ஜை வைத்துக்கொண்டு ஒரு புதிய ரேடியோ வாங்கிவிடலாமென்று தோன்றியது.

என் மூத்த அண்ணாவின் பையன் இருக்கிறானே, பாபு, அவன் மிக விஷமக்காரன். வயது ஐந்துதான் ஆகிறது, ஆனால் அவன் செய்யும் லூட்டி சொல்லிமுடியாது. ஒரு நாள் அவன் மேஜைமீது ஏறி ரேடியோவின் 'பிளக்' கைப்பொருத்த முயற்சித்திருக்கிறான். லேசாக 'ஷாக்' அடித்துவிட்டது. அவன் 'குய்யோ, முறையோ' என்று கத்த, வீட்டில் ஒரே அமளியாகிவிட்டது. அம்மா அப்பாவிடம் இரைந்தாள்: "அந்தச்சனியனை விற்றுத்தொலைத்துவிட்டு மறுகாரியம் பாருங்கள்!" என்று.

அம்மா சொன்னபிறகு அதற்கு எதிர்ப்பு ஏது? ஆகவே ரேடியோ விற்கப்பட்டது. எங்களுக்கு அதை விற்ற கம்பெனிக்காரனே அதை வாங்கிக்கொண்டான். ரேடியோ ரொம்பக்கெட்டுப் போயிருக்கிறதென்றும், நூறு ரூபாய்க்குமேல் கிடைக்காதென்றும் எங்களுக்காக நூற்றிஇருபத்தைந்து ரூபாய் தருவதாகவும் சொன்னான். எப்படியானாலும் சரி, ரேடியோ போய்விட்டது. இப்போது நிம்மதியாக இருக்கமுடிகிறது. ஏதாவது முக்கியமான கச்சேரி கேட்கவேண்டுமானால் ஒரு மைல் தூரத்திலிருக்கும் 'பார்க்'குக்குச் சென்று கேட்டுவருகிறேன். அங்கே ஒரு தொந்தரவுமின்றிக் கேட்கமுடிகிறது.

யோகி சுத்தானந்தபாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷை பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பள நிதிக்கே

காளிதாசர் கனவு

6. ருது ரங்கம்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பிறகு காளிதாசர் கூறினார்:

"உடனே பருவம் மாறுகின்றது, கார்காலம் (வருஷாகாலம்) வருகின்றது:

"ஸஸீகராம் போதரமத்தகுஞ்சர:
தடித்பதாகோ ऽசனிசப்தமர்தல: |
ஸமாகதோ ராஜவதுத்ததத்யுதி:
கனாகம: காமிஜனப்ரிய: ப்ரியே ||"

(நீர்த் துளிகளை வாரி இறைக்கும் மேகத்தை யானையாக வும் மின்னலைக் கொடியாகவும், இடியை மத்தளமாகவும் கொண்ட ஒளிவீசும் அரசனைப்போல் காதலர் விரும்பும் கார் காலம் வருகின்றது).

நம்முடைய நாடு கதிரவன் வெப்பத்தால் செழிப்பாக இருக் கின்றது. ஆனால் மழை நாள் தான் குளிர்ச்சியால் உடலுக்கு இன்பத்தையளிக்கின்றது. மழையைப் பொழிவதால் தான் இந்திரன் தேவர் கோனாகின்றான். பருவகால மழை வேண்டிய அளவு பொழிந்தால்தான் யாவரும் சுகவாழ்வாக வாழமுடியும்.

சில மேகங்கள் கருநெய்தல் மலர்கள்போலும், சில மேகங்கள் மைபோலவும் விளங்குகின்றன. சாதகப்பறவைகளால் விரும்பி வேண்டப்பட்ட மழை முகில்கள் நீருண்டதால் தாழவே சென்று மழையைப் பொழிந்து காதுகளுக்கும் மனங்களுக்கும் இன்பத்தை யளித்து மெல்ல மெல்லச் செல்லுகின்றன. தொலை நாடுகளுக்குச் சென்றிருக்கும் காதலர்களுடைய மனதை இடிமுரசுடனும் மின் னல் நாணேற்றிய வானவில்லில் பூட்டி எய்யப்பட்ட மழைத் துளி யம்புகளாலும் முகில்கள் எதிர்க்கின்றன.

வைடூர்யக்கல் பிளக்கப்பட்ட இடத்தின் ஒளி போன்ற அழ குடைய புற்களாலும், வாழை இலைகளாலும், பட்டுப் பூச்சிகளா லும், பூதேவி நீலமாணிக்க ஆபரணம் பூண்ட இளம் மங்கைபோல் விளங்குகிறாள். இனிமையாகக் கூவிக்களித்துத் தோகையை விரித்து மயில் ஆடுகின்றது. கலங்கிய நீர் நிரம்பிய ஆறுகள் கட்டுக்கடங்காத பெண்களைப்போல் விரைந்து கரையிலுள்ள மரங்களைக் கீழே தள்ளி வேகமாக ஓடிக்கடலில் வீழ்கின்றன. பெண்மான்களால் கவ்வப்பட்ட பலநிறங்களுள்ள மொட்டுகளுடன் கூடிய செடிகளாலும் இளந்தளிர்களால் அழகுடன் விளங்கும் மரங்களாலும் விந்தியமலைக்காடுகள் மிளிர்கின்றன. அச்சம் நிறைந்த அழகிய கரிய கண்களால் நம் மனத்தைக் கவரும் பெண் மான்கள் மணல்மேடுகளில் உட்கார்ந்து இருக்கும் நிலைமை மனதைக் களிப்பிக்கின்றது.

இடிமுழக்கம் நிறைந்த இருண்ட இரவுகளிலும்கூட மின்னல் ஒளியால் வழியை அறிந்து காதலிகள் காதலர்களைத்தேடிச்

சென்று சந்திக்கின்றார்கள். இடிமுழக்கத்தையும் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒளியையும் கண்டு பயந்து பெண்கள் தவறு செய்த காதலர்களை மன்னித்து அணைகின்றார்கள். வெளிநாடுகள் சென்றிருக்கும் காதலர்களுடைய மனைவிகள் கண்ணீர் வடிந்து உதடுகளில் விழும்படி வருந்தி மலர்களையும் நகைகளையும் நீக்கி துயரத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள்.

புழு மண் புல் முதலியவைகளை வேகமாகத் தள்ளிக்கொண்டு பாம்புபோல் வளைந்து வளைந்து தவளைகளுக்கு அச்சத்தை உண்டாக்கிபுது மழை நீர் ஓடுகின்றது. இலைபூவற்ற தாமரையை விட்டு விட்டுமதுரமாக ஒலிக்கும் வண்டுகள் மயிலின் விரிந்த தோகையிலுள்ள அழகிய கண்களை ஆம்பல் மலர்களாகக் கருதி அவைகளை நாடுகின்றன. மதமடைந்த காட்டுயானைகள் புது முகில்களைப் போல் ஒலித்து ஓடும்பொழுது அவைகளுடைய மதஜலத்தை விரும்பி வண்டுகள பின்தொடர்கின்றன. முகில்கள் தங்கும் மலைகளில் ஒலித்து தாரையாக விழும் அருவிகளும் மயில் நடனங்களும் மனத்திற்கு இன்பத்தை யளிக்கின்றன. கதம்பம் தாழைமுதலிய மலர்களைத் தொடுவதால் மணம் நிறைந்து மழையால் குளிர்ந்து வீசும் காற்று எல்லோர் மனங்களையும் கவர்கின்றது. மணமுள்ள மலரணிந்து இடுப்பு வரையில் தொங்கும் கூந்தல்களாலும் ஆரம் பூண்ட தனங்களாலும் மதுவுண்ட முகங்களாலும் பெண்கள் ஆடவர்களுடைய மனங்களைக் கவர்கின்றார்கள். மின்னல்களாலும் வானவில்களாலும் அலங்கரிக்கப்பட்டு நீர்நிறைவினால் தாழச் செல்லும் முகில்களும், ஒட்டியாணங்களுடனும் கம்மல்களுடனும் விளங்கும் மங்கைகளும் பிராணிகளுடைய எண்ணங்களை வசீகரிக்கின்றன. சந்தனம் மணக்கும் அங்கங்களுடனும் மலர்மணம் வீசும் கூந்தல்களுடனும் இடிமுழக்கத்தைக் கேட்ட பெண்கள் படுக்கை அறையை நாடுகின்றார்கள.

மலர்கள்நிறைந்த மரக்கிளைகள் காற்றால் அசைவதால்அவை நடனம்செய்வதுபோல் தோன்றுகின்றன. புதுமழையால் வெப்பந் தணிந்த காடு தாழம்பூவின மலர்ச்சியால் புன்முறுவல் செய்வது போலிருக்கின்றது. வருஷ ருது காதலனைப்போல் பெண்களுக்குத் தலையில் வகுள மலர்களையும காதில் கதம்பு மலரையும் சூட்டு கின்றது. நீருண்ட முகில்கள் "இந்த மலை நமக்கு உறைவிடம்" என்று அன்புடன் நெருங்கி முதுவேனிற்கால வெப்பத்தால் தவிக்கும் விந்தியமலையை மழையால் களிப்பிக்கின்றது.

> "பஹுகுண ரமணீய: காமினீசித்தஹாரீ
> தருவிடபலதானும் பாந்தவோநிர்விகார: |
> ஜலத சமய ஏஷ: ப்ராணிநாம் ப்ராணபூத:
> திசது தவ ஹிதானி ப்ராயசோவாஞ்சிதானி" ||

("அனேக நற்குணங்களுள்ளதும் காதலர்கள் மனதைக் கவர்வதும் மரம் செடிகொடிகளுடைய பந்துவும் பிராணிகளுக்கு உயிருக்குயிரான இம்மழைகாலம நீ விரும்பும் இஷ்டங்களை அளிக்கட்டும்") (தொடரும்.)

மேனாட்டுத் தத்துவம்

ப்ரோட்டாகரஸ்

ரா. ஸ்ரீ. தேசிகன், M. A.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

ப்ரோட்டாகரஸ்: கி. மு. 500 (Protagoras)

ப்ரோட்டாகரஸ் என்ற ஆசிரியரைப்பற்றி ஆராய்வதற்கு முன்பு சோபிஸ் (Sophist) என்ற இனத்தாரைப்பற்றி நாம் நன்கு உணரவேண்டும். இவர் சோபிஸ் இனத்தாரில் தலைசிறந்தவர் அன்றோ?

கிரேக்கர்கள் பார்த்துப் படிக்காமல் கேட்டே பொருள் களைத் தெரிந்துகொண்டார்கள். அவருடைய ஞானம் கண்களின் வழியாய் மனத்திற்குச் செல்லவில்லை, அவர்கள் செவிகள் கொண்டு அதைப் பெற்றனர். ஒலிம்பியா முதலிய இடங்களில் சோபிஸ் திரிந்தனர். அவர்கள் ஊதா உடைகளைத் தரித்துக் கொண்டு திருவிழாக்களில் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். பலபொருள்களை நுணுக்கமாகத் துருவி ஆராயும் ஆற்றல் அவர் களிடத்தில் திகழ்ந்தது.

அரசியல் துறையில் நடத்தவேண்டிய அலுவல்களுக்கேற்ற அறிவு, பள்ளிகளில் கிடைக்கவில்லை. தனித்த மனிதர்களைக் கொண்டோ, சமுதாயத்தைக் கொண்டோ பள்ளிகள் நிறுவப் படவில்லை. கல்வித்துறையில் எழுந்த குறைகள் ஊர்ஊராய்த் திரிந்து போதிக்கும் ஆசிரியர்கள் மூலம் தீர்ந்தன. இவ்வாசிரியர் களைச் சூழ்ந்தனர் பற்பல இளம் மாணுக்கர்கள். சமுதாய சேவைக்கு அவர்களை இவர்கள் தயார் செயதனர்.

பல துறைகளிலும் இவர்கள் ஞானம் பெற்றவர்கள். பிளேட்டோ சோபிஸ்ஸைப்பற்றித் தரும் சித்திரம் நோக்கத் தகுந்தது. இப்பொழுது பத்திரிகை ஆசிரியரும், பள்ளிகளில் பேராசிரியர்களும் ஆற்றிவரும் தொழிலை இவர்கள் புரிந்து வந்தனர். இவர்களை மாணுக்கர்கள் தங்கள் தோள்கள்மீது தாங்கிச் செல்வார்கள். இவர்கள் போகின்ற இடங்களில் ஒரு பெரும் கிளர்ச்சி எழும். உதாரணமாக: ப்ரோட்டாகரஸ் விஜயம் செய்கிறபொழுது நகரமுழுதிலும் ஒரு பரபரப்புத் தோன்றும். பொழுது புலர்வதற்கு முன்பே, ஒரு மாணுக்கன் ஸாக்ரடீஸை நண்ணி, ப்ரோட்டாகரஸ்ஸிடம் தனக்குச் சிபார்சு செய்யும்படிக் கேட்பான். இத்தகைய பெருமை அவரிடத்தில் இருந்தது என்பது சொல்லாமலேயே விளங்கும்.

"சோபிஸ்' என்ற சொல் முதலில் இழிவான பொருளில் வழங்கப்படவில்லை. இப்பொழுது பேராசிரியர் என்று கூறு கிறோமே, இதே பொருளைத்தான் அச்சொல்லும் சுட்டிற்று.

இவர்கள் பாடஞ் சொல்லி வயிறு வளர்த்தார்கள். சமுதாயத்தில் பள்ளிகளில்லை என்று முன்பு கூறினேம். யாரிடத்தில் செல்வம் தழைத்ததோ அவர்களை அண்டி இவர்கள் பிழைத்தனர்.

கிரேக்க நாகரிகம் செல்வர்களிடந்தான் ஓங்கிற்று என்றாலும் குடியரசு உணர்ச்சிக்குக் குறைவில்லை. நீதிபதிகள், கவர்மெண்டு வேலைக்காரர்கள்—இவர்கள் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். வாதிகள், பிரதிவாதிகள் முதலியோர்கள் தாங்களே தங்கள் தங்கள் விவகாரங்களை எடுத்துரைக்க வேண்டும். இப்பொழுது இருக்கிறதுபோல வக்கீல்மார்கள் அந்தக் காலத்தில் இல்லை. அவரவர் சொல்வன்மையைப் பொறுத்ததாயிருந்தன, வெற்றியும் தோல்வியும்;சொல்வன்மையை சோபிஸ்ஸிடம் மக்கள் பெற்றனர். அவர்களிடம் பாடம் கேட்பார்கள். அல்லது அவர்களைக்கொண்டு பேச்சுக்களைத் தயார்செய்து கொள்ளுவார்கள். சொற்பொழிவுக் கலையைச் சோபிஸ் வளர்த்தனர் என்பது உண்மையே.

கிரேக்க குடியரசில் எதுவும் நிகழக்கூடியதே. பெரிகிலீஸ்-க்கு விரோதமாய்க் குடியரசுக் கட்சி கிளம்பிற்று. அவன் பதவியிலிருந்து துரத்தப்பட்டான். பிளேக்கும் தலைவிரித்தாடிற்று. அவனுடைய இரண்டு பிள்ளைகளும் மாண்டனர்.

ஆகவே எந்த நிலையில் எது நிகழுமோ ஒன்றுஞ் சொல்லுவதற்கில்லை என்றுகுறிப்பிட்டோம். தம்குடியரசுக்கட்சியை எதிர்க்கச் சொல்வன்மை வேண்டும். சோபிஸ் இனத்தார் ஒரு கட்சிக்குச் சகாயமாயிருந்தனர்;மற்றொரு கட்சிக்கு விரோதிகளாய் விட்டனர்.

பொதுவாய் அவர்கள் சமுதாயத்தொண்டு ஆற்றிவந்தனர். தத்துவவிசாரணையுஞ் செய்தார்கள் என்பதுஉண்மையே. ஆனால் பிளேட்டோ அவர்களை நிந்தித்தும் பேசியிருக்கிறார்; எதையும் திரித்துப் பொருள்கொள்வார்கள் என்ற அபவாதத்தை அவர்கள் அடைந்து விட்டனர். பிளேட்டோ வரைந்த கேலிச் சித்திரம் ஒரு தவறான அபிப்பிராயத்தை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்துவிட்டது.

ப்ரோட்டாகரஸ் சம்பளத்தைப் பெறுவதற்காகபிராதுசெய்த செய்தி இங்கே நோக்கத் தகுந்தது. வெற்றி பெறுமானால், மாணக்கன் குருவுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்த வேண்டும். பிராதில் மாணக்கன் வெற்றி பெற்றான். காணிக்கையைச் செலுத்தவேண்டுமென்று குரு கேட்டதற்கு ஒரு விசித்திரமான பதிலை அளித்தான் மாணக்கன். கோர்ட்டில் தாவாப்போட்டார் குரு; குருவுக்குச் சிஷ்யன் பின்வருமாறு கூறினான்: "நான் வெற்றிபெற்றால், கோர்ட்டாரின் தீர்ப்பை ஒட்டி நான் தங்களுக்கு தரவேண்டியதில்லை; நான் தோற்றால் நான் தங்களிடம் ஒப்பந்தம்செய்ததற் கிணங்ககாணிக்கை தரவேண்டியதில்லை; எங்ஙிலையிலும் நான் பணம் தரவேண்டியதில்லை" என்று மாணக்கன் சொன்னதாக ஒரு பொய்க்கதை வழங்கி வருகின்றது.

சொல்லின் திறமையை வைத்துக்கொண்டு, எதையும் சாதிக்கலாமென்று இதனால் ஏற்படுகின்றதன்றோ; சொல்லால் எல்லோரையும் சோபிஸ் மயக்கிவந்தனர் என்று அவர்களை

நிந்தித்தனர் மாந்தர்கள்; "சோபிஸ்" என்ற சொல் "அறிவுள்ள" (Wise) என்ற கிரேக்க சொல்லிலிருந்து பிறந்தது; யோசனை செய்ய, (to think out) அல்லது ஒன்றை வகுக்க (to devise) என்ற வினைச்சொல்லில் இருந்து தோன்றிற்று என்றுகூறினுலும் பொருந்தும்; இந்தச் சொல் கவிகள், தத்துவஞானிகள், பிரபலமான காயகர்கள், ஏழு ஞானிகள் என்று சிறப்பித்து மொழியப் பெற்ற சான்றேர்கள்—இவர்கள் அனைவரையும் இச்சொற் கொண்டு அழைத்தனர்.

ஆனல் காலம் தேயத்தேய இச்சொல் இழிவான நிலையை அடைந்துவிட்டது. அறிவை விற்று இவர்கள் பிழைத்தனர் என்று பிளேட்டோ இவர் மீது குற்றஞ்சாட்டினர். பிளேட்டோவுக்கு சொத்து சுதந்திரமிருந்தன; அதனல் இந்தச் சுருதியில் பேசினர். வித்தையை விற்கக்கூடாது என்று நாமும் கூறுகின்றேம். இப்பொழுது நிலைமாறிவிட்டது; முன்பு வேந்தர்கள் வேண்டிய சௌகரியங்களை அமைத்துத்தந்திருந்தனர். இப்பொழுது அத்தகைய சௌகரியங்களில்லை. கீதை உபதேசம் செய்கிறவனும் பணத்திற்கு ஆசைப்பட்டுத்தான் செய்கிறன். வேதாந்த காலக்ஷேபங்கள் புரிகிறவர்களும் பணத்தையே நாடிச் செய்கின்றனர். வேதாந்த பிரவசனம் வயிற்றுப் பிழைப்புக்காகவே என்று சாற்றலாம்; இது பிழையன்று, வேறு வழியில்லை; அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்? கல்லூரிகளில் மாதச் சம்பளங்கள் வாங்கிக்கொண்டுதத்துவத்தைப்போதிக்கவில்லையா?

முதல்முதலில் பத்திரிகைவாயிலாக ஊதியம் பெற்ற பைரன் (Byron) மனம் நொந்த சம்பவத்தை நாமறிவோம்; இது நிற்க; ப்ரோட்டாகரஸ் கண்ட நல்லதை ஆராய்வோம்.

இவர் கி. மு. 500-ல் ஆப்டிரா என்கிற நகரத்தில் பிறந்தவர். இதே ஊரில்தான் டெமாகிரிட்டஸ் உதயமானர். ஏதன்ஸ் நகரத்திற்கு இரண்டுதரம் இவர் விஜயம்செய்திருக்கிறர். தூரி (Thurri) என்ற நகரத்திற்குச்சட்டதிட்டங்களை வகுத்துத் தந்தவர் இவரே; இவருக்குத் தெய்வபக்தி இல்லை என்ற குற்றம் இவர்மீது சாட்டப்பட்டது. இது உண்மையாயிருக்க முடியாது என்று ரசல் கருதுகின்றர். 'தெய்வங்களைப்பற்றி' (On the Gods) என்று ஒரு நூல் எழுதியிருக்கிறர்.

"தெய்வங்களைப்பற்றி நான் கொண்ட கருத்துக்களை உங்கட்குத் தருகின்றேன். அவைகள் இருக்கின்றனவோ இல்லையோ எனக்குத்தெரியாது; அவைகள் எந்த வடிவை அடைந்திருக்கின்றன, அதுவும் எனக்குத்தெரியாது. இந்த விஷயம் புரியாத விஷயம். மேலும் மனிதனின் பிராயமும் குறுகிய பிராயந்தான்" என்று.

இப்படி இவர் நவின்றபோதிலும் தெய்வத்தை இழிவுபடுத்திக் கூறினர் என்று சொல்வதற்கில்லை.

ப்ரோட்டாகரஸ் மிகவும் புகழ்பெற்ற போதக ஆசிரியர். உபாத்தியாயர் தொழிலை வெற்றிகரமாய் நடத்தினர். கல்விமுறையைப்பற்றி நீண்ட சிந்தனையில் ஆழ்ந்து தம் கருத்துக்களைத்

தந்திருக்கிறார். படிப்பு இயற்கையாய் அமையவேண்டும். அந்த இயற்கை அறிவை அப்பியாசத்தால் வளமுறச்செய்யவேண்டும். படிப்பின் வெறும் விதிகளை மட்டும் பின்பற்றினால் போதாது. விதிகளில்லாத வெறும் அப்பியாசம் போதாது; அப்பியாசமில்லாத வெறும் விதிகளும் பயனில்லை. மேலும் படிப்புத்திட்டத்தில் இலக்கணத்தை முதல்முதலில் புகுத்தியவர் இவரே. பிரயோகங்களுக்கு இவர் ஹோமரை நண்ணினார்.

ஒன்றையும் துணிந்து 'இது சரி, இது தவறு' என்று சொல்லுவதற்கில்லை என்ற முடிவுக்கு வந்தவர். ரெனன் (Renan) என்பவரும் தாம் இறப்பதற்குமுன் இதே சுருதியில் மொழிந்ததாகத் தெரிகின்றது. மரணத்திற்கப்பால் ஒன்றும் நமக்குத் தெரியாது: அதைப்பற்றித் துணிவாய் ஒன்றைச் சொல்லவும் வேண்டாம், அதை மறுக்கவும் வேண்டாம்?

ப்ரோட்டகரஸ் எழுதிய 'உண்மை' என்ற நூல் சிந்திக்கத் தகுந்தது. அந்நூலில் பின்வரும் வாக்கியம் காணப்படுகின்றது:

"எல்லாப் பொருள்களின் தன்மை மனிதனின் அளவைப் பொறுத்ததாயிருக்கிறது:(Man is the Measure of All things) இவ் வாக்கியத்திற்கு ரசல் மிகத் தெளிவாய் உரைசெய்கின்றார். மாந்தர்களிடையே அபிப்பிராய பேதம் நிகழுமானால், இதைத் தீர்க்க ஒரு தனித்த உண்மையில்லை. இந்தத் தனித்த உண்மையான உரைகல் கொண்டே ஒன்று நல்லது அல்லது கெட்டது என்று திடமாய்ச் சொல்லவேண்டும். உண்மை மனிதனின் இயல்பைப் பொறுத்தது என்று சொல்லிவிட்டால், அவருடைய நன்மை தீமைக்கேற்றவாறு உண்மை தோன்றும் என்று சொல்லிவிடலாம். இதற்குத்தான் ப்ராக்மாட்டிசம் (Pragmatism) என்று ஆங்கிலத்தில் மொழிவார்கள்.

இத்தகைய 'ப்ராக்மாட்டிக்கொள்கையை நிறுவியவர்களில் ஒருவராகிய ஷில்லர் (Schiller) ப்ரோட்டகரஸின் 'சிஷ்யர்'என்று தம்மைச் சொல்லிக்கொள்ளுகிறார். பிளேட்டோ ப்ரோட்டாகரஸ் கண்ட தத்துவத்தைப் பற்றிச் சர்ச்சை செய்கிறார்: ஒரு கருத்து மற்றொரு கருத்தைவிட நன்றாயிருக்கலாம்: ஆனால், அதை உண்மை என்று சொல்லுவதற்கில்லை:

ஒருவருக்கு மஞ்சக்காமாலை வருமானால் அவர் பொருள்கள் எல்லாம் மஞ்சள் என்று சொல்வார்: மஞ்சள் இல்லை என்று அவரோடு வாதாடினால் பிரயோஜனமில்லை. வியாதிக்காரனுடைய கருத்தைவிட நோயற்றவனுடைய கருத்து நல்லது என்று சொல்லலாம். அதற்குமேல் அதிகம் சொல்லுவதிற்கில்லை:

உண்மை மனிதனைப் பொறுத்ததே என்ற ப்ராக்மாட்டிக் கொள்கையின் வித்து ப்ரோட்டாகரஸ் கண்ட தத்துவத்திலிருக்கிறது என்று சொல்லலாம்.

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்த்த
நன்மை பயக்கு மெனின்"

என்று கூறிய வள்ளுவரும் "ப்ராக்மாட்டிக் கொள்கையைச் சார்ந்தவர் என்றே கூறலாம். ஆகையால் எல்லாவிதக் கொள்கைகளும் சமுதாயத்தில் இடம்பெறுகின்றன. கதேயும் ப்ரோட்டாகரஸ் கொள்கையைத் தான் கூறினதாகத் தெரிகின்றது.

"இயற்கைச் சக்திகளை நாம் சோதிக்கலாம்; அளக்கலாம். ஆனால், முடிவில் மனிதனுடைய அளவாய்த்தான் அது நிற்கின்றது. உண்மை யாதோ? ஒன்றுஞ்சொல்வதற்கில்லை" என்றார்.

ஜியார்ஜியஸ் (Georgias) ப்ரோட்டாகரஸ் வகுத்தபாதையில் சென்றார். இவர் ஒரு பிரபலமான அணிஇலக்கண ஆசிரியர். ஒரு சிறந்த தேசாபிமானி; இவர் 'ஒன்றுமே இல்லை' யென்று சாதிக்கத் தொடங்கினார். ஒரு பரம்பொருள் இல்லை என்றார். அப்படியிருந்தாலும் அதை அறியமுடியாது; அதை அறிந்தாலும் அதைச் சொற்கொண்டு வெளியிடமுடியாது...என்று கூறினார். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு ஏதனஸ் உயர்ந்த நாகரீகத்தை அடைந்த நூற்றாண்டாகும் பெரிய நாடக ஆசிரியர்கள் திகழ்ந்த காலமும் இதுவே. உலகமே போற்றக்கூடிய உண்மையான அறிஞர் சாக்ரடீஸ் அவதரித்த காலமும் ஈதேயாகும். (தொடரும்)

பக்தன் ஜய௵ புரட்டாசி இதழ்

பொருளடக்கம்.

	பக்கம்		பக்கம்
நூறு ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள்—ராஜாஜி	355	கீதா தாத்பர்யம்	378
சிக்கதேவராய விண்ணப்பம்	361	நவராத்திரி ஓவிய மலர்	383
வேதாந்த தேசிகன்	364	...சித்திரவிளக்கம்	387
அமலனாதிபிரான்	369	ப்ரத்யக்ஷ தெய்வம்	391
வால்மீகியும் கம்பரும்	375	கப்யாஸ ச்ருதி ஆராய்ச்சி	411
		உத்ஸவங்கள் முதலியன	417

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன் எழுதிய

பாலர்
மோகினி
சிறுகதைகள்
விலை ரூ. 1.

ராகம் | பந்துவராளி

1. த்ரு லகு | த்ரு லகு |

, ஸ்ா | ரீ ஸ்ா — ஸ்ர ஸ்ா || ஸ்நி ரிஸ் | தா த ம — தா நீ ||
. பார் | த்தனு — க்கு || அன்ற. | ருளி . — பார ||
ஸ்ா ஸ்ா | ரீ ஸ்ா — ஷை || ஷை | ஷை ||
பார் | த்தனுக் || | ||
ஷை | ஷை || ஸ்ாநீநிஸ்ரிஸ் | ஷை ||
அன்ற |
தத தக | ரீ ரி ஸ் — நித தநி || ரிஸ் நித | ப ம க ரி — ஸநி தநி ||
காத்த | வன் தன் — . . னை . || விண்ணோர் | க . ரு . — மா . . ||
ஷை | ஷை || ஷை ||

ஷை | ஷை || ஷை ||

தததக | ரீரீநிஸ்ரிக-காரிஸநீநீ || தநிஸரிரீஸநி | தாதாஸாநீ-தாபாமாகா
காத்த | வன் தன்..- . னை . . . || விண்..ணோ | . ர் . க. — ரு . மா . ||

ஷை | ஷை || ஷை | ஷை ||

அநு

; பா | த நி தா — பா பா || பா மா | மபதப — ப ம க ம ||
. தி | ர்த்தனை — பூ . . || ம்பொ | ழி ... ல் — சூ . . ழ் ||
; பா | த நி தா — தாநிஸநீநீ || தாதபாதநித | நீதபமாமா —
தி | ர்த்தனை — பூ . . . . . || ம்பொழில் . . . | சூ . ழ் —
பாதாபதநீ | நீதாதாநீ--தநிஸ்ாஸ்ாநீ || ஸ்ாரிகரீநீ | ஸ்ரிஸ்ாதாநிஸ்-
தி . . . ர் | த்த . னை — . . . பூம் || பொ...ழில் | ...சூ.. — . . . . . ||
; தா | நீ ஸ் ஸ் — கா கா || ரீரீஸாரிக | ரிஸநித — நிஸ்ரிஸ் ||
. மூ | ர்த்தியை — க்கை . || தொழ . . | வும்மு . — டி . யுங் ||
தநிஸ்ா |
. . பா |

2. சர

; ம | மா மா — மா மா || கா மா | கரி — ரி க மா ||
. வ | லம் புரி — யா . || . . | ழி . — யனை ||
; கம | கரி ஸா — ரிஸ நித || நீ ஸா | ரீ கா — கா கா ||
. புல | ம்புரி — நூ ... || . ல | வனைப் — . . ||
, பா | தா நித — பா பா || பா மா | மப தப — ப ம க ம ||
. சி | லம்பிய — லா . . || . று | டை ... — ம . . . ||
, தா | நீ ஸ் ஸ் — கா கா || ரீரீஸ்ாரிக | ரிஸ்நித — நிஸ் ரிஸ் ||
. ந | லந்திகழ் — நா . || ர . ண.. | னை . ந — ணுகுங் ||

3. மத்யமகால

மா மா | கரிரிக — மா மா || க ம த த | நிஸநிநி — த ம க ரி ||
புள்ளினை | வாய்பிள-- ந் து || பொருமா | கரிகொம்-பொசித்து ||
நிநி ஸஸ | நித தநி — ஸ்ா ஸ்ா || த த க க | ரிரிமக — ரிஸ் ஸ்நி ||
தெள்ளரு | விகொழி-- க்கும் || திருமா | லிருஞ்சோ-லைநின்ற ||

கீர்த்தனை

ஏ. ராஜம்மாள்.

தாளம்: ரூபகம்

த்ரு லகு | த்ரு லகு |
ஸ்ா ஸ்ா | ஸ்ா ஸ்ா — ; த நி || ஸ்ா ஸ்ா | ஸ்ா ரிஸ் — நிததநி ||
தத்து | . . . . — ஒரு || தேர் | முன்னின்— . . று . ||
டை — ; த த || ப தநித | த த த நி— ஸ் நீ நி ||
ஒரு || தேர் | முன் நின்— . . று ||
டை || ப ம ப த | த ப த நி—நித நிஸ் ||
|| தே . . . | முன் . . —னின் . று ||
ஸா ஸா | ஸா ஸா —ஸா ஸா || கா கா | மா மா — தா , நி ||
ணிக்க | . . . . — . . . . || மா | ம . —லை . மை ||
டை || ஸ ரி க ரி | க ம க ம —த ம த நி ||
|| மா . ம | . . லை . — . மை... ||
டை || ஸ ரி க ம | ப ம க ம —தநி ஸ்நி ||
|| மா . . | ம . லை . — . . மை . ||
ரிஸ ஸரி | கா கா — கா கா || கா மா | பா தப — மக கம ||
. . . . | ணிக் — க . || மா . | . . — ம . லை ||
தநிஸ்நி ||
. . மை . ||
கா மா க ம த நி | தா மா தா நீ — த நி ஸ் ரி ஸ் நி த நி ||
மா . . . . | ம . லை . — . . மை . . ||
ஸ்ா ||
பா ||

பல்லவி

மா த ப | தநி நித— தா தா || த ப த நி | ஸரி ஸா— ஸா ஸா ||
. . திரு | மா . . . — விருஞ் || சோ . . | . லை நி—ன்ற ||
ப த ப த ப ம மா || கமதப | டை—டை || டை | டை — டை ||
. . திரு |
நீ தாபா தநி || தபமா தாப | டை—டை || டை | டை — டை ||
. . ழ்திரு | — || ||
ரீ ரீ | ரீ ஸ நி —த ம த ப || தா தா | மக ரிஸ —ரி க ம ப ||
கொல் | . என் — . . . . || மெய் | கு . ழற்—கே . . . ||

ணம்

மா க ம | தா தா — நீ தா || மா மா | மா ம க — ப ம கா ||
. : வரை | யார் — திறல் || தோ . | ளன் தன்— . . னே ||
; கா | மா பா — மக மா || பா பா | மா தப — தா தா ||
, பொ | ழில்வேங்-- . கட || வே . | திய . — . . னே ||
மா தப | தநி நித — தா தா || த ப த நி | ஸ்ரி ஸ்ா—ஸ்ா ஸ்ா ||
. . திரு | மா . . —விருஞ் || சோ . . | . லை நின்— . ற ||
ரீ ரீ | ரீ ஸ நி —த ம த ப || தா தா | மக ரிஸ —ஸ ஸ ரி க ||
கொல் | . என்— . . . . || . . | நன்னு —தலே . . ||

சாஹித்யம்

ம க ரி ரி | ஸநி தநி — ஸாஸா || ஸ ரி கா | ம ம ப ம —க ம த த ||
கள்ளச் . | சகடுதை--த்த . || கரு மா | ணிக்கமா--மலை மை ||
ஸ் க ரி ரி | ஸ்நி தநி— ஸ்ா ஸ்ா || ஸ்ரி நித | த ம ம க —ம த த நி ||
வள்ளலே | வாணுத-லார் || வணங்கித் | தொழவல்லள்-கொலோ

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

நானும் என் மனைவியும் ஒவ்வொரு மாதமும் இரண்டாந் தேதியை வெகு ஆவலுடன் எதிர்பார்ப்போம். எதற்கென்றால் வாழ்க்கை தீபமும், வாழ்க்கையில் ஒரு சம்பவமும் என்கிற விஷயங்களைப் படிக்கவே.

வரதக்ஷிணை விஷயமாக உள்ள எங்கள் வாழ்க்கையில் ஒரு சம்பவத்தையும் எல்லோரும் அறியவேண்டும் என்று ஆசைப் பட்டு இதை எழுதுகிறேன். நான் சிறிய பையனாக இருக்கும் போது வரதக்ஷிணை வாங்கக்கூடாது என்றதுபற்றிய வை.மு.கோ. புத்தகங்களைப் படித்திருக்கிறேன். எனக்கும் கல்யாண காலம்வந்தது. என்னையும் என் பெற்றோர்கள் பேரம் பேசக் கிளம்பினார்கள். நான் வெகு தைரியமாக எதிர்த்துச் சண்டை போட்டு வரதக்ஷிணையே வாங்கக்கூடாது...வாங்குவதானால் கல்யாணமே வேண்டாம்....என்று முரட்டுத்தனம் செய்தேன். என் தூரத்துப்பந்துவின் மகளை வரதக்ஷிணையில்லாமல் கல்யாணத்தையும் பண்ணிக்கொண்டேன்.

என் பெற்றோர் என்னை விரோதிபோலவே பாவித்து என் மனைவியை அழைக்க மறுத்தார்கள். நானாகப்போய் ஒரு நாள் திடுதிப்பென்று அழைத்துவந்துவிட்டேன். அது காரணமாக பலத்த மனஸ்தாபத்துடன் அவர்கள் சீறுமாறு செய்ய ஆரம்பித்தார்கள்: நான் என் மனைவியுடன் தனிக்குடித்தனம் போய்விட்டேன். பாழும் பணத்தினால் பெற்ற பாசங்கூட குறைந்துவிட்டதே என்று நான் வருத்தப்படுவேன்.

வருஷம் மூன்று கழிந்துவிட்டது. என் தங்கையின் கணவன் இந்த விஷயமறிந்து தன் மனைவியை என் பெற்றோரிடம் அனுப்பிவிட்டு வரதக்ஷிணை இல்லாததால் பெற்றபிள்ளையைக்கூடத் துறந்துவிட்டார்களே! அதுபோல் இன்னும் சீரும் பணமும் கொண்டுவந்தால்தான் அழைப்பேன்...என்று சட்டம்போட்டுவிட்டானாம்! அப்போதுதான் எங்கம்மாவுக்கு இதயம் என்பது ஒன்று இருக்கிறது என்பது தெரிந்தது. பணத்திற்கு எங்கேபோவது, பாவம்! அம்மா அழுதுவருந்துவதைக் கேள்விப்பட்ட நாங்களும் கஷ்டப்பட்டோம். ஒரு நாள் அம்மாவே நேரேவந்து விஷயத்தைச் சொல்லி, "என்னடா செய்வது?" என்று வருந்தினாள். நானும் என் மனைவியும் சிக்கனமாகக் குடும்பம் நடத்தியதில் 800 ரூபாய் சேர்த்து ஒரு வைரக்கம்மல் வாங்கி இருந்தோம். அதை என் தங்கைக்குப்போட்டு நானே நேரில்போய் தங்கையை அவள் கணவனிடம்விட்டு வரதக்ஷிணையைப்பற்றி ப்ரஸங்கமும் செய்தேன்.

"நீ சிறிய கையால் சம்பாதித்த சொத்து; உன் மனைவிக்கே இருக்கட்டும்" என்று வைரக்கம்மலைத் திருப்பிக் கொடுத்து எனக்கு ஏகப்பட்ட உபசாரம் செய்தார்கள். "உங்கம்மா உன்னிடம் வருவதற்காகத்தான் நான் இப்படிச் செய்தேன்" என்று மருமகப்பிள்ளை சொல்லிவிட்டான்! எப்படி என் சரித்திரம்?...

—"வெங்கிட்டு"

பாசத்தின் பலம்!

அம்மா! ஒரேஒரு பொம்மைவாங்கித்தாம்மா போதும்; அதுக்குமேலே கேட்கவேமாட்டேன். என் சிநேகிதிகள் எல்லாரும் கொலுவைச்சிருக்கிறார்கள். நீ வைக்கவில்லையாடீ?... நீ கொலு வைக்கவில்லையாடீ?...என்று எல்லோரும் கேட்கிறார்கள், அம்மா! கொலு வைத்து தினம் பூஜை பண்ணால் நன்றாய்ப் படிப்புவந்து உசத்தியா இருப்பான்னுசொல்ராம்மா.

ஆமாம்; இப்போ உசத்தியா இருக்கும் அழகுபோதும்! அசடுபோல் என்னைப்பிச்சாதே; சொன்னால் கேளு; கொலு வைத்துவிட்டால் போதுமா?... தினம் நைவேத்தியம் செய்யப் பழம் பால் சுண்டல் எல்லாம் எப்படிச் சேகரிப்பதாம்? அதற்கெல்லாம் பணம் யார் தருவார்கள்? நம்ப படத்திற்குப் பூஜை செய், போதும்;ஸரஸ்வதி பூஜை அன்று உன் புஸ்தகங்களுக்கு பூஜைசெய்து உன் சிநேகிதிகளை அழைத்துப் பழம், சுண்டல், வெத்தலைபாக்கு எல்லாம் கொடு; அவ்வளவுதான் நமக்குச் சக்தி. அதிகம்தொந்தரவு செய்தால் உதைதான் கிடைக்கும், போ!...என்று சீறி விழுந்தாள்.

பாவம்! ராஜம் மூஞ்சியைத் தொங்கவிட்டுக்கொண்டு கண்ணில் நீர் பெருக, பேசாது வீதித்திண்ணையில் வந்து உட்கார்ந்தாள். அவள் இதயத்தில் பெரிய புயலே அடிக்கத் துடங்கியது. சின்னஞ்சிறு உள்ளம் ஏக்கத்தால் நிரம்பியது. அவள் கட்டிய பலமான கோட்டை ஒரு கொடியில் இடிந்துவிட்டதால், துக்கம் தாங்காது தவித்தாள்! தான் எப்படியாவது அழுது அமர்க்களம் பண்ணி அம்மாவைச் சரிப்படுத்திவிடலாம...என்று எவ்வளவோ முயற்சி செய்தாள். ஆனால் பலன்தான் பூஜ்யமாய்விட்டது.

சாவித்திரிக்குமட்டும் குழந்தை கொலு வைத்துக்களிக்க வேண்டாம் என்று எண்ணமா? சம்பாதித்துப்போட்டு குடும்பத்தைக் காக்கும் தலைவன் இல்லை. இருக்கும் ஆஸ்தி பூராவும் ஒரு வீடுதான்; அதைக் குடிக்கூலிக்குவிட்டு அதில் வரும் 50 ரூபாயில் இரண்டு குழந்தைகள், அவள் ஜீவிக்கவேண்டும். இதில் பசங்களின் படிப்பு வேறு. எப்படித்தான் குடும்பத்தை நடத்துவாள், பாவம்! எப்படியோ கட்டிப்பிடித்துக் குடும்பம் நடந்தால் போதும் என்று இருக்கும் சமயம் ராஜியின் ஆசையை எப்படிப் பூர்த்தி செய்வாள்?...சின்ன வயதில் குழந்தை ஆசைப்படும்போது அதன் உள்ளத்தை திருப்தி செய்ய முடியவில்லையே என்று அவளுக்கும் [illegible] ஒரு சமயம் கொலு வைத்துக்கொ[illegible] குழந்தை அழுகிறதே என்றும் தோன்றியது. குறைந்து

நாலு பொம்மையாவது வேண்டாமா?... அதற்குப் பணம்?... மாதக்கடைசி... கையில் காலணா இல்லையே!... யாரைக்கேட்பது?... கொலு என்று வைத்தால் நாலு சுமங்கலிக்குத் தாம்பூலம் தரவேண்டாமா? அந்தச் செலவுக்குப் பணம் என்னிடம் ஏது!... என்று பலவாறு எண்ணமிட்டுக் குழம்பினாள். கடைசியில் யோசித்து யோசித்துக் கொலு வைக்கவேண்டாம்... பிழைத்துக்கிடந்தால் அடுத்த வருஷம் பார்க்கலாம்... என்ற முடிவுக்கே வந்தாள்.

ராஜம் ஏக்கத்தோடு வீதியில் போகும் பெண்களையே பார்த்து உட்கார்ந்து இருந்தாள். கூடைகூடையாய் பொம்மைகள் விற்கும் ஆட்களின் குரல் பின்னும் அவள் ஏக்கத்தைத் தூண்டிவிட்டது. தான்தான் வைக்கவில்லை என்றாலும் சிநேகிதிகளின் வீட்டுக்கொலுவாவது போய்ப்பார்க்கலாம் என்று ஓடினாள். ஒவ்வொரு வீட்டுக்கொலுவும் அவளைச்சந்தோஷத்தில் ஆழ்த்தியது. என்ன அழகான கொலுக்கள்! அவர்கள் கட்டி இருக்கும் மலைகள், பார்க்குகள், கோபுர வாசல், செட்டியார் கடை, க்ராமக்காட்சி... இப்படிப் படிகள் கட்டிபொம்மைவைப்பதைவிட மணலைக்கொட்டிச் செய்திருக்கும் அழகு ராஜத்தை ப்ரமிக்கச் செய்தது. "சரி; அம்மா பொம்மை வாங்கித்தராவிட்டால் போகட்டும் இப்படி மணலைக் கொட்டியாவது ஏதாவது செய்யலாமா?" என்று மறுபடியும் ஆசை தலைதூக்கியது. அவள் ஆசையை இன்னும் கிளப்புவதுபோல் அவள் சிநேகிதி, "ராஜம்! நீ கொலு வைத்தாய் விட்டதா? வேடிக்கை பார்க்கவந்துவிட்டாயே!... எத்தனை படி வைத்திருக்கிறாய்?..." என்று கேட்டாள். காதில் இந்த வார்த்தை விழுந்ததுதான் தாமதம்... ராஜத்தின் முகம் சுருங்கி மனம்வெட்கித் தலைகுனிந்தது; துக்கத்தை அடக்கியவாறு, எங்க அம்மா "வைக்கமுடியாது... பொம்மை வாங்கப் பணம் இல்லை; வேண்டாம்"... என்று சொல்லிவிட்டாள். எங்க வீட்டில்தான்கொலுவே இல்லை... என்று அழாதகுறையாய்ச் சொன்னாள். இதற்குள் அவள் சிநேகிதி ராஜத்தின் முகத்தைத் தூக்கி, "அடஅசடு! இந்த அம்மாக்களே அப்படித் தாண்டீ!... பணம் இல்லை, பணம் இல்லை... என்றுநம்மை ஏமாற்றி விடுகிறார்கள். எங்க அம்மாகூட, "இந்தத்தடவை அதிகமாய் எல்லோரையும் கூப்பிட்டு வெத்தலைபாக்கு தரமுடியாது; சாஸ்திரத்திற்கு இரண்டு பொம்மை வைத்தால்போதும்; ஸரஸ்வதி பூஜை அன்று நாலுபேரைக் கூப்பிட்டுத் தாம்பூலம் தரலாம்" என்று சொன்னாள். கொலு வைத்துவிட்டு நம் சிநேகிதிகளை எப்படி அழைக்காது இருக்கமுடியும்? அப்புறம் நான் அழுது ரகளை செய்து கொலுவைப் பெரிசாய் அழகாய் வைத்தேன். நீயும் பெரிசாய்க் கத்தி, சாப்பிடாது அடம்செய்து ரகளை செய்; உங்க அம்மாவும் வைத்துக்கொடுப்பாள்; நான் பண்ண

ஆர்ப்பாட்டத்தில் 20 ரூபாய்க்கு எங்க அம்மா புதுப் பொம்மைகள்கூட வாங்கினுள்! அவர்கள் அப்படித்தான் இல்லை என்று கதைபண்ணுவார்கள். நீபோய் வீட்டையே துவம்ஸம் செய்; உன் தொந்தரவு பொறுக்காது கொலு வைத்துக் கொடுத்துவிடுவா"...என்று பலமான தூபம்போட்டாள்.

அவ்வளவுதான்! ராஜத்திற்கு இதைக்கேட்டதும் தான் அடம்செய்து கொலுவைத்து விட்டதுபோல் சந்தோஷம் உண்டாகிவிட்டது. நேராய் வீட்டை அடைந்தாள். சினேகிதி சொன்னபடியே தன் சாமர்த்யம் பூராவும் காட்டி ரகளை செய்யத்துடங்கினுள். பெட்டிபேழைகளைக் கிளறிஞல்கூட ஒத்தை ரூபாய் கிடைக்கவில்லை. என்ன செய்வாள் பாவம், சாவித்ரி? குடி இருப்பவர்களையும் கடன் கேட்டுப்பார்த்தாள். ஆனுல் ஒன்றும் சாயவில்லை. ராஜமோ அழுகையை நிறுத்தினபாடு காணும். நயமாய் எவ்வளவோ சொல்லிப்பார்த்தாள்... "அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பிகள்கூட உதவமாட்டார்கள்" என்று அந்தப் பழமொழியை நினைத்துச் சாவித்ரி இங்கிதம் தெரியாது ரகளைசெய்யும் ராஜத்தை உதைத்துக்கட்டினுள். அடிவாங்கியதுதான் கண்டதே தவிர ராஜத்தின் ஆசை பூர்த்தி ஆகவில்லை. ராஜம் அழுது அழுது மூஞ்சியும் வீங்கிவிட்டது!

இதை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்த வேணு ஒன்றும் செய்யத்தெரியாது முழித்தான்.......தங்கையைப் பார்த்தால் ஏனே பரிதாபமாய்விட்டது! கஷ்டமாய் இருந்தாலும் என்னசெய்வான் சிறுவன்? தன் சினேகிதன் பொம்மைக்கடை வைத்திருப்பது ஞாபகம் வரவே அவனையாவது கெஞ்சிக்கேட்டு இனமாய் இரண்டு பொம்மை வாங்கிவரலாமா என்றுதோன்றியது; உடனேகடையைநோக்கிப்புறப்பட்டான்; ஆனுல் அங்கும் ஏமாற்றம்தான்; கடையில் அவன் சினேகிதனைக்காணவில்லை; என்ன செய்யலாம்? அவன் வீட்டுக்காவது போய்ப் பார்க்கலாமா என்று நினைத்தான்; அங்கு வைத்திருக்கும் பொம்மைகளின் கவர்ச்சி அவனை அங்கு இருந்துபோகாதவாறு தடுத்தது! அதன் அழகை வேடிக்கை பார்த்துக்கொண்டே நின்றுவிட்டான்! அவன் இருந்த சில மணிநேரங்களில் பலபேர் விதவிதமான பொம்மைகளை அனுயாசமாய்ப் பணத்தைக்கொடுத்து வாங்கிச்சென்றூர்கள். இதை எல்லாம் பார்க்கப்பார்க்க ராஜத்தின் பரிதாபமான முகம் வேணுவைக் கலங்கச்செய்தது! பாவம்! ராஜத்திற்கும் இந்தக் குழந்தைகளைப்போல்தானே ஆசை இருக்கும். எப்படியும் அவள் ஆசையைப் பூர்த்திசெய்துதான் ஆகவேண்டும்; பாவம், அம்மாவும் பணம் இல்லாது தவிக்கிறுள்; என்ன செய்யலாம்?... என்று பலமானயோசனையில் இறங்கினுன்.

தங்கையின் மேல் இருக்கும்பாசத்தால் திருடவும் அவன் மனம் துணிந்தது! பொம்மை வாங்கத்தான் வழி இல்லே. பின்பு என்ன செய்வது? ஆனால் அன்றுவரை திருடுவது என்ற பழக்கமே இல்லாததால் மனது படபடவென்று அடித்துக்கொண்டது; கைகள் நடுங்கின! யாரும் பார்க்காத சமயம் எடுக்கலாம் என்றால் அவன் அங்கங்களே அவனுக்கு ஒத்து உழைக்க மறுத்தன! இந்த நிலையில் பெரிய பணக்காரர் ப்ரம்மாண்டமான காரில் பொம்மைக்கடைக்கு வந்து இறங்கினர். அதே சமயம் வேணுவின் சினேகிதன் ரத்னமும் கடைக்கு வந்தான். வேணு துரிதமாய் ஓடி சினேகிதனைவார வேற்றுப் பேச்சுகள் கொடுத்துத் தன் தங்கை நிலைமையையும் எடுத்துச்சொல்லி இரண்டு பொம்மைகள் கேட்டான். ரத்னம், "வேணு! எங்க அப்பா மஹா கஞ்சன்! பொம்மையின் விலையைக்கூடக் கொஞ்சம் குறைத்துத்தரக்கூட மனது வராது! அதிலும் இனமாய்த்தரவேமாட்டார்! நீ என்கூடவே இரு. யாருக்கும் தெரியாது சின்ன பொம்மையில் 4 எடுத்துக் கொடுத்துவிடுகிறேன். நீ ஓட்டம் பிடித்துவிடு. உன் தங்கை ஆசையும் பூர்த்தி ஆகட்டும்...என்றான். வேணுவும் சந்தோஷத்தோடு ரத்னம் கூடவே நின்றுகொண்டிருந்தான். வந்த பெரிய மனிதன் 100 ரூ. நோட்டுகளாகவே எண்ணி பொம்மைகளைக் கடையோடு புரட்டிக்கொண்டு இருந்தார். அந்தச் சந்தோஷத்தில் எல்லோரும் பரபரப்பாய்ப் பொம்மைகளை எடுத்துத் தருவதில் இருந்தார்கள். இந்தச் சமயம் பார்த்து ரத்னம் ஆறு அழகான பொம்மைகளை எடுத்து வேணுவின் கையில் மறைத்து ஓடச்சொன்னான். "காசிக்கு போனாலும் சனீச்வரன் விடவில்லை" என்பதுபோல் படியில் இருந்து வேணு இறங்கும்போது வீதியில் யாரோபார்த்துக்கொண்டே இருந்து ரத்னத்தின் தகப்பனரிடம் சொல்லித் தொலைத்தார்கள்! கேட்கவேண்டுமா? உடனே கடையின் ஆட்கள் துரத்தி அடித்து பொம்மை சகிதம் வேணுவைத் திருடனைப்போல் இழுத்து வந்தனர். வேணுவும் பேந்தப்பேந்த ரத்னத்தின் முகத்தைப் பார்த்து விழித்துக்கொண்டு நின்றான். கடைக்காரர் ஆத்திரம் பொங்க பெரிய மனிதர் வியாபாரம் செய்ய வந்து இருப்பதையும் மறந்து வேணுவின் கையில் இருக்கும் பொம்மைகளைப் பிடுங்கி வைத்து முன்பின் யோசியாது, "படவா! இந்தச் சின்னவயதில் இத்தனை திருட்டுத்தனமா? பெரியவனாய்விட்டால் பக்கா ரௌடியாய்த்தான் திரிவாய்! வாவா! உன் கையை உடைத்து விடுகிறேன்...என்று யாரும் எதிர்பார்க்காதவிதம் பளபள என்று கன்னம்புடைக்க அறைந்துவிட்டார். இவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டிருந்த ரத்னம் பொறுமை இழந்தான். பதைபதைப்புடன் தந்தையின் முன்வந்து, "அப்பா! திருடியது அவன் இல்லே; நான்தான். என்னைத் தண்டிப்பா" ...என்று வேணுவை நகர்த்தித் தான்வந்து நின்றான். இதைப்

பார்த்து ப்ரமித்து, "சீ அசடு! உனக்கு என்ன மூளைக் கோளாறு? திருட்டுப் பையனுக்குப் பரிய வந்துவிட்டாய்! போ ஒத்தி" என்றார்; ஆனால் ரத்னம் தந்தையின் கையை இழுத்துத்தள்ளி, "அப்பா! நான் உண்மையாய்த்தான் சொல்கிறேன்; பொறுமையாய்க் கேளுங்கள்" என்று வேணுவின் ஏழ்மை நிலையையும், தங்கையின் பரிதாபத்தையும் பூராவும் சொல்லி, "அதனால் நான்நீ கொடுக்கமாட்டாய்என்றுதிருடித் தந்து ஓடச்சொன்னேன். போராத வேளை அகப்பட்டுக் கொண்டான்" என்று சொல்லி முடித்தான். ரத்னத்தின் தந்தை ப்ரமித்துப்போனார்; தன் குமாரனின் தயாள குணத்தை எண்ணிப் பெருமையாய் இருந்தாலும் 5 ரூபாய் மதிப்புள்ள பொம்மையைக் கொடுக்க மனம்வராது தவித்தார். இதை கோடியில் அறிந்த ரத்னம், "அப்பா! பார்த்தீர்களா? இவ்வளவு பொம்மைகள் எப்படிக்கொடுத்து விட்டான் என்று நினைக்கிறீர்கள்! நேற்று ஒரு ஏழை அம்மா தன் குழந்தை ஆசைபட்ட இந்த லக்ஷ்மி பொம்மையை இரண்டணா குறைத்துத் தரும்படி மன்றாடினாளே; உங்களுக்கு இரண்டணா குறைக்க மனம் வந்ததா? ஏழை என்றுகூட பார்க்காது தாக்ஷிண்யமின்றி மறுத்துவிட்டீர்களே! அதனால்தான் உங்களுக்குத் தெரியாமல் எடுத்துக் கொடுத்தேன். நாலு ஏழைக்குச் சகாயம் செய்யுங்கள், அப்போ பகவான் நமக்கு நிறையத் தருவார். உங்க கையாலேயே வேணுவிடம் இந்த பொம்மைகளைக் கொடுத்து அனுப்புங்கள், அப்பா!" என்று மூச்சுவிடாது சொன்னான். எல்லோரும் ரத்னத்தின் ரத்னமான குணத்தைப் பார்த்துப் பூரித்தார்கள். அவன் தந்தையும் அவன் புத்திசாலித்தனத்தையும், கருணை உள்ளத்தையும் பார்த்துப் பூரித்துச் சந்தோஷத்தோடு அந்தப் பொம்மைகளோடு இன்னும் இரண்டு பொம்மைகளைச் சேர்த்துத் த்ருப்தியோடு வேணுவிடம் தந்தார். ரத்னம் முகமலர்ச்சியோடு வழி அனுப்ப, வேணு விச்வாசம் நிறைந்த கண்களோடு நன்றி செலுத்தியவாறு ஆனந்தம் பொங்க வீட்டை அடைந்தான்.

இந்தப் பொம்மைகளையும், நடந்த நிகழ்ச்சிகளையும் கேட்ட சாவித்திரியும் ராஜமும் ஆனந்தக் கூத்தாடினார்கள், உடனேபடிகள் கட்டி பொம்மை வைத்து தன் சிநேகிதிகளை எல்லாம் அழைத்து ஆனந்தமாய் ராஜம் கொலுவைக் கொண்டாடினாள். வெற்றிக்கொடியே தன் கையில் வந்ததைப் போல் சந்தோஷத்தோடு வேணு தன் தங்கையைப் பார்த்து மனம்பூரிக்க நின்றான்!

ஜகன்மோகினி 31-வது ஆண்டு, 1954

வருடச் சந்தா ரூ. 3.

தனிப் பிரதி அணா 4-

பதரிக்கும் அப்பால்

மஹர்ஷிகள் தர்சனம்

✽

ஸௌபாக்யவதி லக்ஷ்மிக்கு ஆசிர்வாதம் உபயகுசலம். 'உன் கடிதங்கண்டு இரண்டு மாதமாகிவிட்டது. தினம் அதையே எதிர் பார்த்து ஏமாற்றமடைந்தேன்' என்று நீ எழுதியிருக்கிறாய். வாஸ்தவம். நானும் ப்ரதிதினமும் எழுதத் துடித்துத்தான் வந்தேன். வேலை சற்றும் ஓய்வே இல்லாத நிலையிலிருப்பதால் தாமதமாகி விட்டது. நமது ஸேவா சங்கத்தின் பொருள்காட்சி வைபவத்தின் விமரிசைகளைப்படித்த அனேக சகோதரிகள் தாமும் அம்மாதிரி கைவேலைகளை முடிந்தவரையில் செய்து நவராத்திரிக்கு வைக்க வேண்டும் என்றும் அவைகள் செய்யும் வழிகளைத் தெரிவிக்கும் படியாயும் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதேபோல் நீயும் எழுதியிருக்கிறாய். பல சகோதரிகளின் கைத்திறமையால் உருவாகியிருக்கும் அரிய பொருள்களை ஒன்று திரட்டி ஓரிடத்தில் அழகுபட வைத்துக் காட்டியதுதான் என் வேலையே யன்றி அவைகளைச் செய்யும் விதமோ, முறையோ அவரவர்களுக்குத் தான் தெரியும்; எனக்குத் தெரியாது.

லக்ஷ்மீ! நவராத்திரி மகிமையின் ப்ரதானம் தேவிபூஜை என்பது முக்யமாக இருப்பதுடன் தொழில் சிறப்பு, கைத்திறமை, கல்வி வளர்ச்சி...முதலிய பலவிதமான முக்ய லக்ஷியங்கள் அந்த பூஜைக்குள் மறைந்துகிடப்பதை நாம் முதலில் உணரவேண்டும். வெறும் பொம்மை விளையாட்டுக்காகப் பொம்மைக்கொலு என்ற மனோபாவம் கூடவேகூடாது. எந்த ஒரு விசேஷத்தையும் நம் முன்னோர்கள் எத்தனையோ உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கித் தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இம்மாதிரி பண்டிகைகளைக் கொண்டாடுவதன்மூலம் பக்தி வ்ருத்தியாகிறது மட்டுமின்றி கலையில் ஆர்வமும் அதை வளர்க்கவேண்டுமென்கிற அபார ஆசையும் உண்டாகிறது.

லக்ஷ்மீ! நான் சமீபத்தில் ஒரு சினேகிதி வீட்டிற்குப். போயிருந்தேன். நவராத்திரிக்காக அவர்கள் சகுந்தலைநாடகத்தை ஸெட்டாக வைப்பதற்காக ஜோடித்துக் கொண்டிருந்தார்கள். அதில் கண்வர் மகரிஷியாக ஒரு பொம்மைக்கு வேஷம் அமைத்திருந்ததைப் பார்த்து நான் பூரித்துப் பேசினேன். அங்கு என் சகோதரியும்கூட வந்திருந்தார்கள். அவர் சொல்லிய ஒரு அதிசய சம்பவத்தை உனக்கு எழுதுகிறேன்: ரிஷிகளின் பொம்மைகளைப் பார்க்கும்போதே நமக்கு ஒரு புனிதத்தன்மை தோன்றுகிறதே! நேராகவே ரிஷிகளைத் தரிசித்த ஒரு பெரியாரை நாங்கள் தரிசித்தோம். அவர் சொல்லிய வரலாறு மிகவும் ஆனந்தமாயிருந்தது என்று என் சகோதரி சொன்னார்.

சமீபத்தில் பதரிகாச்ரமத்தில் நடந்த மகத்தான யாகத்தைப் பற்றி நீயும் தெரிந்துகொண்டிருக்கலாம். அந்த யாகத்திற்காக எத்தனையோ பேர்கள் பதரிகாச்ரமத்திற்குச் சென்றார்கள்.

வைபோகமென்றால் சொல்லி சாத்யப்படாதாம்!......அத்தகைய வைபோகமாய் யாகம் நடந்ததாம்! அந்தப் பதரிகாச்ரமத்தின் கோயிலுக்கு அப்பால் சுமார் 10 மைல் தூரத்தில் பனிமலைகள் அடர்ந்த காடாக இருக்கிறதாம். அந்தக் காட்டில் சாதாரண மனிதர்கள் போய்வருவது மிகவும் சிரமமாம். முதலில் மனோ தைரியம், உடல் வலிமை சகிப்புத்தன்மை...முதலியன இருந்தால் தான் போய்வரமுடியுமாம்; அந்தக் காட்டில் ரிஷிகள் இருப்பதாயும் அவர்களைத் தரிசிக்க வேண்டும் என்கிற ஆசையால் சிலர் தைரியமாகச் சென்றும் பாதிதூரம்கூடப் போகமுடியாமல் திரும்பி விட்டதாகவும் சிலர் அந்தப் பனிக்கட்டியின் குளிர் தாங்காமல் விறைத்துப்போய் உயிர் இழந்துவிட்டதாகவும் ஜனங்கள் சொல்லிக் கொண்டார்களாம். எங்கோ ஆயிரத்தில் ஒருவர் தைரியமாகச் சென்று ரிஷிகளைத் தரிசித்துவிட்டு வந்ததாகவும் சொல்லிக் கொண்டார்களாம்.

தன்யர்களான யாத்ரீகர்கள்.

இந்த யாகத்திற்காகச் சென்ற பக்தகோடிகளில் 7, 8 பேர்கள் இந்த வரலாற்றைக்கேட்டு எப்படியாவது தாமும்போய் ஸேவித்து விட்டுத்தான் வரவேண்டும். ப்ராப்தமிருந்தால் ரிஷிகளின் திவ்ய தரிசனம் கிடைக்கட்டும், இல்லையேல் செத்தாலும் சாவோம் என்ற மனஉறுதியைக் கொண்டு வெகு துணிகரமாகக் கிளம்பினார்களாம் கூடுமானவரையில் குளிரைத் தடுப்பதற்காக காலணி மிகப் பருமனாக வாங்கிக்கொண்டு மூன்றுநாலு கம்பளிச் சொக்காய்கள், சால்வைகள், முண்டாசுகள் முதலிய பந்தோபஸ்துகளுடன் காலையிலேயே கிளம்பினார்களாம். காடு என்ற பதத்தைக்கேட்கும் போதே காட்டு மிருகங்களைப்பற்றித் தானே நினைவுவரும். பயந்து நடுங்கச் செய்யும்? ஆனால் அந்தக் காட்டில் ஒருமிருகம்கூட இல்லையாம்.

ஏற்கெனவே போய் வந்தவர்களிடம் வழிகள் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பதால் ரிஷிகளின் தரிசனத்தின்மீதிருந்த ஆவலால் வெகு தைரியமாயும் உத்ஸாகமாயும் சென்றார்களாம். "........காட்டில் ரிஷிகள் யோகநிஷ்டையிலிருப்பார்கள். அல்லது தம் போக்காகச் செல்வார்கள். அவர்கள் செல்லும்போது நம்மைப் பார்த்துக் கூப்பிடவும் மாட்டார்கள்; நிற்கவும் மாட்டார்கள். நாமாகத் தடதடவென்று அவர்கள் முன்பு சென்று நமஸ்காரம் செய்துவிட்டுப் பின்பு பேசினால் சம்ஸ்க்ருதத்தில்தான் அவர்கள் பதில் பேசுவார்கள்; மற்றப்படி பேசமாட்டார்கள்............" என்று ஏற்கெனவே இவர்களுக்கு எச்சரித்திருந்தார்கள்.

சுமார் 7, 8மைல் தூரமும் நடந்திருப்பார்களாம்; ஒரு ரிஷிகூட கண்ணுக்குப் புலப்படவே இல்லையாம். மணியோ ஏறிக்கொண்டு போகிறதாம். 4 மணி சுமாருக்குக் காட்டில் சிறிது தூரத்தில் இரண்டு ரிஷிகள் செல்வதைக்கண்டு பரம சந்தோஷத்துடன் விரைந்துசென்று காலில் விழுந்து தண்டன்சமர்ப்பித்தார்களாம்.

ரிஷிகள் நின்று ஆசீர்வதித்தார்களாம். பத்தரைமாற்றுத் தங்கத்தை உருக்கி வார்த்ததுபோன்ற திருமேனியுடன திகம்பரர் களாய்க் காட்சியளித்த ரிஷிகளைக்கண்டதும் இந்த யாத்ரீகர்கள்

உடல் சிலிர்த்துப் பூரித்துப்போய் விட்டார்களாம். பேசவும் தெரியாது உணர்ச்சிவயப்பட்டு சில விநாடிகள் நின்று "பிறகு சம்ஸ்க்ருதத்தில் சம்பாஷிக்கத்துடங்கி, "இன்று நாங்கள் க்ருதார்த்தர்களானோம்" என்றார்களாம். "பதரியாகத்திற்காக தக்ஷிண தேசத்திலிருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று தெரிகிறது. நீங்கள் ஒருகுறையுமின்றி சுகமாக இருப்பீர்கள். நீங்கள் இருக்கும் ஊர்களும் சுபிக்ஷமாக இருக்கும். தக்ஷிண தேசத்திற்கு நல்ல மங்களமும் செழுமையும் உண்டாகும்" என்று வாழ்த்தினார்களாம் மகரிஷிகள் !

இவர்கள் கையில் கொண்டுபோயிருந்த பழத்தை அவர்களிடம் கொடுத்தார்களாம், அதை வாங்கி ஒரே ஒரு விள்ளல் மட்டும் எடுத்துக்கொண்டு திருப்பிக்கொடுத்து விட்டார்களாம். "ஸ்வாமீ ! இந்தக்காட்டில் உங்களுக்கு ஆகாராதிகள் எப்படி?" என்று இவர்கள் கேட்டார்களாம். ஏதோ ஒரு திசையில் கையைக் காட்டி "அதோ!" என்றார்களாம்.

அந்த ப்ரதேசத்தின் அழகும் மலைகளும் அதிலிருந்து கொட்டும் அருவிகளின் அத்புதமும் சொல்லிமுடியாத வனப்புடன் இருந்தனவாம், அருவியிலிருந்து விழும் ஜலத்தின் திவலைகள் இவர்கள்மீது பட்டதே குளிர் தாங்கமுடியாது இவர்கள் தவித்தார்களாம். அந்த ரிஷிகள் அனாயாஸமாக அருவி ஜலத்தைக் கையில் எடுத்து இவர்களுக்கு ப்ரோக்ஷித்தார்களாம்.

ரிஷிகள் காட்டிய திக்கைநோக்கிப் போகையில் வழியில் ஒரு மலைக்குகையில் இதேபோல் ஒரு ரிஷி கண்களைமூடி யோகத்திலாழ்ந்திருந்த காட்சியையும் தரிசித்துச் சற்று நின்றார்களாம். அவர் கண்ணையே திறக்கவில்லையாம். சரீரமும் அசையவில்லையாம். அப்படியே தரிசித்துவிட்டுத் திரும்பினார்களாம். ரிஷிகள் காட்டிய திக்கில் பழங்கள் குலுங்கும் மரங்கள் ஏராளமாக இருந்தனவாம். அந்தப் பழங்களைப் பறித்து இவர்களும் சாப்பிட்டபடியே திரும்பி விட்டார்களாம். இரவு 9 மணி சுமாருக்கு பதரிகாச்ரமத்துக் கோயிலுக்கு வந்து சேர்ந்தார்களாம். அத்தகைய புண்யபுருஷர்களில் ஒருவரை பதரி யாத்திரையிலிருந்துவந்தவுடனே என் சகோதரி முதலியவர்கள் நமஸ்கரித்து, இந்த ஆச்சரியமான விஷயத்தை நேருக்கு நேராகக் கேட்டு, அந்த உணர்ச்சியுடன் எனக்குச் சொன்னார்கள்.

மகான்களின் தரிசனமும் உபதேசமும் விலைமதிப்பற்ற நிதியல்லவா ? அந்த ரிஷிகள் சொல்லியபடியே நம் பாரதநாட்டின் பல விதகஷ்டங்களும் நீங்கி க்ஷேமமும் சந்தோஷமும் உண்டாகிவிட்டால்போதும் !

லக்ஷ்மீ ! இத்தகைய அதிசயமான விஷயங்களைக் கேட்கும் போது நமக்கும் அத்தகைய மகரிஷிகளைத் தரிசிக்கவேண்டும் என்கிற ஆசை உண்டாகிறது. எதற்கும் பாக்யம் வேண்டாமா ? இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் என்ற முறையில் நான் சந்தோஷப்படுகிறேன் !

இப்படிக்கு,

உன் மாமி.

22

உண்மையில் வனஜாவுக்கு எற்பட்ட பயமும் அதிர்ச்சியும் அவளுடைய வாழ்க்கை ஏட்டையே மாற்றிவிட்டதென்றால் மிகையாகாது. அதேபோல மீனாக்ஷியின் வாழ்வும் புதியதாகிவிட்டதால் இருவருடைய பேச்சும் போக்கும் காண சுந்தரேசனுக்கு அதிக ஆச்சரியமாகவே இருந்தது. மீனாக்ஷியின் அதிகாரம், உரத்த குரல், கடிபிடி...எதுவுமே இல்லாத நிலையில் அவள் தனது வேலைகளை முடித்துவிட்டு மாடியில் எறித் தன் பெண்ணருகில் வந்தமர்ந்தாள்.

தாயைக் கண்டதும் வனஜாவுக்கு எதனாலோ அழுகை அழுகையாய் வந்து அழுதுவிட்டாள். "அம்மா! நாளைய தினம் நான்; எத்தனையோ சந்தோஷமாய் விருந்து விழாவில் கலந்து கொண்டு மகிழ எண்ணினேன். என் போதாத காலமல்லவா நான் இப்படிக் கிடக்கும்படி ஆய்விட்டது" என்று அழுதாள்.

மீனா:—கண்ணா, அழாதே! நம் வீட்டில் இன்னும் எத்தனையோ விசேஷங்கள் வரப்போகிறது. அவைகளை நீ நினைத்தபடி நடத்தலாம். இந்த மட்டும் உனக்கு வந்த அபகீர்த்தியும் ஆபத்தும் நம் கண்மணி லக்ஷ்மியால் தீர்ந்ததே, அதுவே போதும்; அசட்டுத்தனமாக நீ எழுதிய கடிதத்தை அண்ணி எடுத்துப் பதுக்காமலிருந்தால், அது எத்தனை தூரம் அனர்த்தத்தைவிளைவித்திருக்கும்! இத்தனை வயதாயும் என்புத்தியும் மங்கிப்போய் நேற்று சினிமாவில் அண்ணியைக் கோபித்துப்பேசிவிட்ட முட்டாள்தனத்தை இப்போதுதான் உணர்கிறேன். அண்ணியினால்தான் உங்களை அண்ணனின் உத்யோகஸ்தர் காப்பாத்தினாராம் என்று அண்ணா சந்தோஷப்பட்டுப்பேசுகிறான். சரி; ஏதோ பிடித்த பீடை 'தலைக்குவந்தது தலைப்பாகையுடன் போயிற்று'. இரவு நன்றாகத் தூங்கு. நாளை விழா முடியட்டும். பிறகு சகலத்தையும் பற்றிப் பேசிக் கொள்ளலாம். இன்று நடந்த சம்பவத்தையே பற்றி நினைத்து உருகாதே" என்று தேற்றிவிட்டு அதே அறையில் தானும் படுத்துக்கொண்டாள்.

எதனாலோ சுந்தரேசனுக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. ஒரு சிறிய நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வனஜா

விடம்வந்தார். வனஜா தூங்காமலேயே விழித்திருப்பதைக் கண்டு அருகிலமர்ந்து, "வனஜா! ஏன் இன்னும் தூங்க வில்லை? ஜுரம் அதிகமாகிவிட்டதா?" என்று நெற்றியைத் தொட்டுப்பார்த்தார். நிதானமாகத்தானிருந்தது. தாயைப் பார்த்ததும் புலம்பியதுபோல் தந்தையைப் பார்த்ததும் வனஜா அழுதுவிட்டாள். "அப்பா! என்மீது கோபமா? என்னை மன்னித்துவிடுகிறீர்களா? அண்ணியாகிய மதி மந்திரியினால் நான் ஒருகண்டத்திலிருந்து தப்பினேன்" என்று முடிப்பதற்குள், "செல்வி! 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' செய்வதுதான் உலகத்தில் பெரும்பாலாரிடமும் உள்ள வழக்கம். அந்த விதிக்கு நீ மட்டும் விலக்கா! உன் மனத்தில் படிந்திருந்த ஆசை என்னும் பாசியை அண்ணி எப்படிக் களைந்தாள் என்பதை ட்ரைவர் சொல்லக் கேட்டுப்பூரித்தேன். இதோ!......ஒரு நோட்டுப் புத்தகத்தையும் அண்ணிதான் சேர்த்து வைத்திருந்தாள். அதை உனக்குக் காட்டுவதற்காகவே என்னிடம் கொடுத்தாள். கொண்டுவந்தேன் பாரு; ....உன்போல் 'இளங்கன்று பயமறியாது' என்கிறபடி ஆசைப் பிசாசின் அடிமையாகிச் சினிமாவில் சேர்ந்து அந்தத்துறையி லுள்ளவர்களின் பசப்பு வார்த்தைகளில் மயங்கித் தம் வாழ்வையே பாழாக்கிக்கொண்டு பிறகு பரிதவித்துச் சாக்கடைக் குப்பையாகிவிட்ட வரலாற்றை அவர்களே சில பத்திரிகைகளில் எழுதியிருக்கும் விஷயங்களைக் கத்தரித்து நோட்டுப் புத்தகத்தில் ஒட்டியிருக்கிறாள். அதை உனக்குப் படித்துக் காட்டவே நான் கொண்டுவந்தேன்" என்னும் போது வனஜாவின் தேகமே பயத்தினால் கிடுகிடென்று நடுங்கியது. "அப்பா! வேண்டாம்! படிக்க வேண்டாம். பொம்மைகளின் அலங்கோலங்களைக் கண்டதே போதும். எனக்கு ஏதோ செய்கிறது. என்னைக் கொஞ்ச நாளைக்கு எங்காவது க்ராமத்திற்கு அனுப்பிவிடுங்களப்பா! நான் இனி படிக்கப்போவதுகூட இல்லை. அமைதியான க்ராம வாழ்க்கையை நான் முற்றிலும் வெறுத்தவள், ஆனால் இன்று இந்த நிமிஷம் அத்தகைய நிம்மதியை மனம் விரும்பி நாடுகிறது. நாளையதினம் விழா முடிந்ததும் போகலாம்பா!" என்று அழுகையும் ஆர்வமும் கலந்து கேட்டாள்.

இதைக் கேட்டுச் சந்தோஷமடைந்த சுந்தரேசன், "வனஜா! உன்னிஷ்டப்படியே நாம் எல்லோருமே இரண்டு மாதகாலம் க்ராமத்திற்குப்போய் நிம்மதியாக இருக்கலாம். அண்ணனுக்கு லீவு கிடைத்தால் அண்ணன், அண்ணி இருவரையுங்கூட அழைத்துச் செல்வோம்: கவலைப்படாதே! வனஜா! உன் அண்ணி சாமான்யப் பெண்ணல்ல; மகாமேதை; குணக்குன்று; சமயோசிதமாகப் பேசி காரியத்தை ஜெய ப்ரதமாகச் செய்யும் திறமை வாய்ந்தவள். அவளிடம் நீ அன்பாயும்

பணிவாயும் இருந்தால் எத்தனையோ மேன்மையை அடையலாம்; சரி! நீ தூங்கு. நானும் போகிறேன்; வீணாக மனத்தைப் போட்டுக் குழப்பிக்கொள்ளாதே; பகவானின் நாமங்களைப் பஜித்து ப்ரார்த்தனை செய்தபடியே தூங்கிவிடு" என்று தேற்றிவிட்டுச் சென்றார்.

வனஜாவுக்குத் தூக்கமேபிடிக்கவில்லை. கிரிஜாவை அவள் வீட்டிற்கே அழைத்துப் போய்விட்டார்கள். வனஜாவுக்கு காய்க்கடியின் வலியைவிட மனவேதனையின் வலிதான் அதிகமாகப் பாதித்தது! தகப்பனார் கொண்டுவந்த புத்தகத்தை அப்போது படிக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டாளேயன்றி, அதைப் படித்துப்பார்க்கவேணும் என்கிற ஆசை லேசாகப் படர்ந்தது. தனது வலிகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு நோட்டுப்புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தாள்:

''உண்மை விளம்பி'' என்கிற பத்திரிகையில் உண்மை விஷயங்களே வருவதால்,எனது உண்மை—ஆனால் ஊழல்—சரிதையைக்கூட எழுதி என்போன்றுள்ள இளம் பெண்களின் வாழ்வுக்குத் தாழ்வும் விபத்தும் நேராவண்ணம் எச்சரிக்கவே இதை நான் எழுதுகிறேன்: (''சினிமா—பலி'')

நான் பிறந்தது ஆலம்பட்டிஎன்கிற ஊர். தாய் தகப்பனார் வைதிகத்துறையில் பழகியவர்கள். என் தாதா, தகப்பனார் இருவரும் வைதிகப் புரோகிதர்கள்தான். என் பிதா புரோகிதம் செய்யும் சில இடங்களில் கல்யாணங்களுக்கு என்னை அழைத்துப்போவார். நான் இயற்கையிலேயே சற்று சுரு சுருப்பாய் மூக்கும் முழியுமாயிருப்பேன். சங்கீதம் இயற்கையாய்த் தானாக வரும். கேட்ட சங்கீதங்களை அப்படியே பாடுவேன். என் பிதா தர்ப்பத்துடன் செல்லும் வீடுகளுக்கு நானும் போவேன்; சாப்பிடுவேன்....பாடச்சொன்ன இடங்களில் எல்லாம் பாடுவேன்.....ஏழைப் பெண். நன்றாகப்பாடுகிறாள் என்று என்னிடம் ப்ரத்யேகமான ப்ரீதிவைத்துப் பலகாரங்கள் கொடுப்பார்கள். சில வீடுகளில் பாவாடை சட்டையுங் கொடுப்பார்கள். இதைக் கண்டே நான் சொர்க்கப் பதவி கிடைத்துவிட்டதாகவே எண்ணிப்பூரித்துப் போவேன்.

அத்தகைய வீடுகளில் ஒரு கல்யாணம் நடந்தது. மூன்று தினங்களும் அங்கேயே இருந்தேன். கல்யாணப்பிள்ளை என் பாட்டைக்கேட்டு மிகமிக ரஸித்ததோடு விடாமல் கல்யாணமாகியபிறகு எங்க வீட்டிற்கு வரத்தொடங்கினார். அவர் ஒரு சினிமாப்படக் கம்பெனியில் ஏதோ வேலையிருப்பவராம் "இந்தப் பெண்ணின் சங்கீதமும் குருகுருப்பான விழியும் சுரு சுருப்பும் வீணாகிவிடுகிறதே என்று எனக்குத்தோன்றுகிறது. என்னாலான சகல உதவிகளையும் செய்து எங்க முதலாளியிடம் சிபார்சு செய்கிறேன். உங்கள் பெண்ணை சினிமாவுக்கு அனுப்

புங்கள். பணம் ஆயிரமாயிரமாய்ச் சேர்ந்துவிடும். உங்கள் குடும்ப தரித்திரமே அவளால் தீர்ந்துவிடும்." என்று ஏதேதோ ப்ரமாதமாய்த் தூபம்போட்டார்.

ஒரு நாள் இரண்டுநாளல்ல! அடுத்தடுத்து வந்துபோட்ட தூபத்தில் என் மனதில்தான் மின்ஸாரம் தாக்கியது. என் பெற்றோரில் தாயார் மிகமிக பயந்து நடுங்கினாள். அந்த மனிதன் வருவதையே வெறுத்தாள். என் தகப்பனாருக்கு ஆசை பம்பரம் ஆடத்துடங்கிய வேகத்தில் பெற்றோரிடையே சண்டையும் மனஸ்தாபமும் வலுத்தது. என் தாயார் ஒண்டியாகி நின்றாள். நானும் பிதாவும் துணிந்து ஆழமறியாத சுழலில் வெகு சந்தோஷமாய்த் தைரியமாய்க் காலைவைத்தோம். இக்காலம்போல அக்காலத்தில் நடிகர்களுக்கு ஆயிரக்கணக்கில் பணம் கொடுக்கமாட்டார்கள். அதிகம் வளர்த்துவானேன்.

சுமார் நாலைந்து படங்களில் நடித்தேன். கதாநாயகியாயல்ல. ஏதோ ஒரு உதவாக்கரைப் பாத்திரத்தில் நடித்தேன். அதோடு என் கண்ணியம் கற்பு முதலிய சகலமும் நாசமாகிவிட்டது. என் குடும்பத்திற்காவது வருவாய் நிறைந்ததென்று பார்த்தீர்களா! என்னை முதல் முதலில் தூண்டி அழைத்துச்சென்ற படுபாவி தனக்குலஞ்சத்தை ஏராளமாகக் கொட்டிக்கொண்டு என்னையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி மாதம் 500 ரூபாய் தான் சிறுகச்சிறுகக் கொடுத்தான். என் தாயார் என்னுடைய அவமானத்தைத் தாங்காமல் துணிந்து தூக்கிவிட்டுக்கொண்டு இறந்தாள்!...குழந்தைகளுடன் நடுத்தெருவில் நின்ற என் தகப்பனாரை வைதீகக் கூட்டம் விலக்கி ப்ரஷ்டம் போட்டது!...காரணம் நான் ஒரு பெண்குழந்தைக்குத் தாயாகிவிட்டேன், குழந்தை பிறந்து நான் நோயாளியாகிவிட்டதால் ஆஸ்பத்திரியில் ஆறு மாதம் கிடந்தேன். என்னை எந்த சினிமாக்காரப் பாவிகளும் ஏனென்று கேட்கவில்லை. என்னைக் கவனிக்க யாருமே இல்லை. பரம்பரையாய்ப் புரோகிதத்தில் பிழைத்து வந்த தொழிலின் வாயிலும் மண் விழுந்துவிட்டது!...எங்கள் குடும்பமே பரிதவித்துப் பாழ் நரகில் வீழ்ந்து விட்டது......

ஆறு மாதங்கழித்து நான் எலும்பும்கூடுமாய் அதே பாதகர்களிடம் போய்க் கேட்டபோது, கண்டபடித் திட்டியதோடு, "சீச்சீ! வெட்கங்கெட்டவளே! பிச்சைக்காரியின் வேஷத்திற்கும் லாயக்கற்ற நீ வந்து கேட்கிறாயே! போடீ! மானங்கெட்ட நாயே!" என்று ஏதேதோ கூசாமல் கூறியபோதுதான், என்னுடைய புத்திகெட்டு நான் இந்தவிஷத்தை அமுதமென்று நம்பிவந்த பயங்கரத்தை அறிந்து, என்னையே நான் செருப்பாலடித்துக் கொண்டேன். இனி எதைச்செய்து என்ன உபயோகம்! ஸினிமாக்காரி...கெட்டுப்போன கழுதை ...விபசாரி...என்று உலகம் தூற்றியதால் ஒரு வீட்டில் வேலை

செய்யக்கூட என்னை ஒருவரும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். பாழாய்ப்போன சினிமாவின் மோகத்தில் என்னைப்போல் யாரும் விழுந்து சாகாமல் தன்மானத்துடன் தன் பழைய குடும்ப கண்ணியத்துடன் வாழவேண்டும் என்கிற நல்ல எண்ணத்திற்காகவே என்னுடைய மானங்கெட்ட சரிதையை எழுதிவிட்டேன்...என்னைப் போன்ற இளம் பெண்களே! இந்தப் பாழும் சினிமா பயங்கரச்சுழலில் விழுந்து பரிதவிக்காதீர்கள். சினிமாவினில் கண்சிமிட்டும் உயர்ந்த நக்ஷத்திரங்கள் எங்கோ ஒரு சிலர்தான் சரியான செல்வாக்குடன் சுமாராக இருக்கிறார்களேயன்றி என்னைப்போன்று நாசமடைந்த பேர்கள்தான் அதிகம். இதைத் தெரிந்துகொள்ளுங்கள்......

இதற்குமேல் படிக்க வனஜாவினால் முடியாது மார்பு படபடவென்று அடித்துக்கொண்டு ஏதோசெய்ததால் அப்படியே புத்தகத்தைப் போட்டுவிட்டுக் கண்ணை இறுகமூடிக்கொண்டுவிட்டாள். கண் முன்பு புத்தகத்தில் படித்த சரிதையின் விஷயமே சுருள்சுருளாகத் தாண்டவமாடித் திடும்திடும் என்று தூக்கிப்போட்டு நடுங்கச்செய்தது!

23

லக்ஷ்மியும் சேகரும் குழம்பித்தவிக்கும் நிலைமையில் சிறிதுநேரம் மவுனம் குடிகொண்டது. மறுபடியும் லக்ஷ்மி சிறிது தைரியமடைந்து பேசத்துடங்கி, "ஸ்வாமீ! பகவான் மீது ஆணையாக சித்தப்பாவின் மீதோ, நம்மீதோ, குற்றமே இல்லை என்பதை ஆண்டவனறியாமலாபோவான். நீங்கள் கவலைப்படாமல் பகவானை நம்பி இருங்கள். சகலமும் நன்மையாகவே முடியும். நாளையதினம் நடக்கவேண்டிய பெரிய காரியம் முடியும் வரையில் எதையும் வெளிக்குக் காட்டிக்கொள்ளவேண்டாம்! அம்மாவுக்கு இன்றைய சம்பவங்களின் அதிர்ச்சியே போதும்; வாட்டிவதைத்துவிட்டது. அதன் பலன் புனர்ஜென்மம் எடுத்ததுபோலாகிவிட்டார். இந்த புதிய விஷயமும் தெரிந்தால் இன்னும் இடிந்துபோவார். ஆகையால் தாங்கள் இதை வெளியிடவேண்டாம். என் பெற்றோருக்கும் தெரியவேண்டாம்: அப்பா இன்னும் தூங்கவில்லை. அவரிடம் நான் சென்று சித்தப்பா விஷயத்தை நேருக்குநேராகத் தெரிந்துகொண்டு வரலாமென்று நினைக்கிறேன். போகட்டுமா?" என்றாள்.

"தாராளமாகச் சென்றுவா லக்ஷ்மீ! நான்கூட அதைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். போய் மெல்ல விஷயத்தைத் தெரிந்துகொண்டுவா!" என்று தட்டிக்கொடுத்

தனுப்பினுன். லக்ஷ்மியும் பயந்தபடியே தன் பிதாவுக்கென்று விடப்பட்டுள்ள தனியறைப்பக்கம் சென்றுள்...வழியிலுள்ள வனஜாவின் அறையில் விளக்கெரிவதும் திறந்திருப்பதும் கண்டு திடுக்கிட்ட லக்ஷ்மிக்கு, இத்தனை பரிபவப்பட்டும் இன்னும் தனது பழயமோகம் விடாமல் ஏதாவது செய்கிறுளா?... என்ற பயந்தான் தோன்றிது. உடனே ஜன்னலருகில் சென்று வனஜாவைக் கவனித்தாள்.

வனஜா தனது பெட்டிகளை எல்லாம் கிளறி எதையோ எடுப்பதும் தேடுவதுமாக இருந்தாள். இதைக்கண்ட லக்ஷ்மி தைரியமாய் உள்ளே சென்று "வனஜா! என்னம்மா செய்கிருய்? இன்னும் தூங்கவில்லையா?" என்றதும், சிறு குழந்தையைப்போல வனஜா சுருட்டிக்கொண்டு எழுந்து லக்ஷ்மியை அப்படியே கட்டிக்கொண்டு, "அண்ணி! உன்னைத்தான் நான் எண்ணியபடி ஒரு முக்யமான விஷயத்தை உன்னிடம் தெரிவிக்க ஆவலாக இருந்தேன். நீயே தெய்வச் செயலாய் வந்துவிட்டாய். அம்மா விழித்துக்கொள்ளப்போகிறுள். மெல்லப்பேசு. இதோபாரு, அண்ணி! என்னுடைய பேராசையின் ஜ்வாலையில் என் வாழ்நாளேபற்றிஎரிந்து சாம்பலாகிவிட இருந்ததை சமயசஞ்சீவியாக நீ வந்து சகலத்தையும் மாற்றி, நான் புதிய புனர்ஜென்மமே எடுத்ததுபோலச் செய்துவிட்டாய்! இனி என் கண்திறந்துவிட்டது. நான் என்னையறியாது செய்துவிட்ட சில அநியாயங்களை—குற்றங்களை உன்னிடம் சொல்லிவிடுகிறேன். அண்ணி! என்னை மன்னித்து இவைகளை அடியோடு குழிதோண்டிப் புதைத்துவிடு. இன்று என் மனம் துடிக்கும் வேகத்தையும் அன்று இருந்த நிலைமையையும் எண்ணிப்பார்த்தால் எனக்கே வியப்பாக இருக்கிறது. நெருப்புடன் விளையாடினுல் எத்தனை பயங்கரம் என்பதையறியாது என் தாயார் கொடுத்த துணிகரமான செல்லத்தின் திமிரினுல், அண்ணனுந்தான் அளவுக்குமீறி ஆசைகாட்டிவிட்டதன் விளைவால், குற்றம் செய்யத்துணிந்துவிட்டேன். அதை மன்னித்துப் பேராபத்திலிருந்து என்னைக் காப்பாற்று அண்ணீ!" என்று ஒரு காகிதக் கத்தையை எடுத்துக் கொடுத்தாள்.

அதை வியப்புடன் வாங்கிப்பார்த்த லக்ஷ்மி தீயைமிதித்தவள்போலத் துள்ளினுள். "வனஜா! இந்தக் கடிதங்களை அனுப்பிவிட்டாயா? அல்லது அனுப்ப எழுதியிருக்கிறுயா? சொல்லு! என்று சற்று கடிந்த த்வனியில் கேட்டாள். வனஜா அழுதபடியே, "அண்ணீ! இது அனுப்பியகடிதங்களின் நகல்தான். இதற்குப்பதில் வந்திருப்பதை இதோ பாரேன். இதைத்தான் நான் நெருப்பாக மதித்துப் பயப்படுகிறேன். அண்ணீ! என்னை இந்தப்பேராபத்திலிருந்து காப்பாற்றுவாயா?" என்று கண்ணீரைச் சிந்தினுள். லக்ஷ்மி அந்தக் கடிதத்தைப் படிக்க

ஆரம்பித்தாள். இதென்ன வனஜா! 'ப்ரிய சோபன' என்று எழுதியிருக்கிறதே. இது யாருடைய பெயர்?...என்ருள்.

வனஜா:—அண்ணி! கண்ணுமண்ணு தெரியாத ஆசையின் வேகத்தில் என்னுடையபெயர் வனஜா என்பது எனக்கே பிடிக்காததால் சினிமாக்காரர்களுக்கும் பிடிக்காது என்கிற பிரமத்தினல் என் பெயரையே சோபன என்று மாற்றி வைத்துக்கொண்டு எழுதினேன். அதனுல் அவன் அப்படி எழுதியிருக்கிருன். இப்பொழுது என்ன செய்வது?...அண்ணி!" என்று கலங்கினுள்.

லக்ஷ்மி:—உஸ்!...சத்தம் போடாதே; அம்மா இன்றைய அதிர்ச்சியில் உடம்பு தெரியாமல் தூங்குகிருர். எழுந்துவிடப் போகிருர்கள், மெல்லப் பேசு. இதோபார், வனஜா! எப்படியும் நீ செய்துவிட்ட தவறுதலை நீயே உணர்ந்து வருந்துகிருயே, அதுவே போதும். நான் இப்போதே அண்ணுவிடம்போய் இந்த நடிகனை டெலிபோனில் கூப்பிட்டு யாரோ சினிமா விசிறி பேசுவதுபோல் அழைத்துப் பேசச் செய்கிறேன்—என்ற உடனே, "ஐயையோ! அண்ணுவிடமா சொல்லிப்பேசச் செய்யப் போகிருய்? என்னவென்று பேசச் சொல்வாய், அண்ணி? எனக்குப் பயமாக இருக்கிறதே! அண்ணனுக்கு அபாரமான கோபம் வந்துவிடுமே, அண்ணி!"—என்று பயந்து நடுங்கினுள்.

லக்ஷ்மி:—நீ பயந்து நடுங்க வேண்டாம் வனஜா! அண்ணுவுக்குச் சகல விஷயமும் தெரியும். அவருடைய சினிமா மோகமும் சேர்ந்துதானே உன்னை இக்கதிக்கு ஆளாக்கி விட்டது. அவரும் திருந்தி விட்டார்; அந்த நடிகனை போனில் கூப்பிட்டு, நான் "உன்னுடைய அபிமானிகளில் ஒருவன், சோபன என்கிற பெயருடன் ஒரு பெண் உனக்கு ஏதோ கடிதம் எழுதியிருப்பதைக்கண்டு ஏமாற்றமடைந்துவிடாதே. உன்னைக் கல்யாண வீட்டில் வரவழைத்துப் பலர் முன்பு அவமானப்படுத்துவதற்காகவே இது சில ஆண்பிள்ளைகள் சேர்ந்து உனது விரோதிகளுடன் கூடிச்செய்துள்ள சூழ்ச்சி; ஆகையால் நீ வராதே; உஷார்!"...என்று கூறிப்பயமுறுத்தி விடச் செய்கிறேன். அதற்கும் மிஞ்சி என்ன நடக்கிறதோ பார்க்கலாம். நீ கவலையற்றுப் படுத்துத் தூங்கு. இத்தகைய அசட்டுக் கடிதங்களிருந்தால் இவைகளை உடனே தீயில் போட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடு. வீட்டில்கூட வைக்காதே வனஜா! இன்னொரு விஷயம்; உன்னுடைய இந்த அசட்டுத்தனமான செய்கைகள் ஊர் பூராவும் பரவிவிட்ட பிறகு உன்னை மணக்க யாருமே முன்வரமாட்டார்கள். ஆகையால் இனி சினிமா என்கிற ஆசையை விட்டுவிடுவதோடு அண்ணு பார்க்கும் வரனை ஆக்ஷேபனையின்றி மணந்து கொண்டுவிட்டால் உன்னைப் பிடித்த பீடை அடியோடு

துலைந்து போய்விடும்: பெண்களுக்கு முக்யம் குடும்ப நிர்வாகத்திற்கான படிப்பும் குடும்பத்தைச் சிக்கனமாகவும் சீராகவும் நடத்தும் முறைக்கான வீட்டுப் படிப்பும்; சரியான வயதில் கல்யாணம் செய்துகொண்டு கணவனுடன் தேனும் பாலும் போன்று குடும்பம் நடத்துவதுதான் முக்யமேயன்றி மற்றது எல்லாம் பிறகுதான்; ஆகையால் அண்ணா சொல்வதற்கு எதிர்த்துப்பேசாதே! நான் இப்போதே சொல்லி வைத்திருக்கிறேன். ஜாக்ரதை" என்று எச்சரித்துவிட்டுப் பின் தன் தகப்பனார் இருக்கும் விடுதிக்குச் சென்றாள்.

விளக்குக் காணவில்லை கதவுப்பக்கமாக சற்று நின்று பார்த்தாள். சந்தடி இல்லாததால் என்ன செய்வது எத்தனை தரம் ப்ரயத்தனம் செய்தாலும் அப்பாவிடம் தனித்து ஒரு வார்த்தைகூடச் சொல்லமுடியவில்லையே! இதற்குள்ளாகவா தூங்கிவிட்டிருப்பார்? எழுப்பிப்பார்க்கலாமா...என்று யோசித்தபடி நின்றாள். மெல்லியகுரலால், "அப்பா! அப்பா! தூங்கிவிட்டீர்களா!" என்று கூப்பிட்டாள்.

உடனே சொக்கம்மாள்தான் வெளியே வந்து, "லக்ஷ்மீ! இன்னும் நீ தூங்கவில்லையாம்மா! அப்பா எங்கேயோ வெளியே போயிருக்கிறார். இந்த வேளையில் நீயும்நானும் தனித்துப் பேசுவதைப் பார்த்தால் தாயும் மகளும் ஏதோ ரகஸியம் பேசிக்கொள்வதாக எண்ணிவிடுவார்கள். நீ போய்ப் படுத்துக்கொள்ளம்மா!" என்றாள்.

லக்ஷ்மி:—அம்மா! நான் என் கணவரின் அனுமதிபெற்றுக்கொண்டுதான் வந்தேன். அதிமுக்யமான இரண்டு விஷயங்களைப்பற்றி அப்பாவிடமும் உன்னிடமும் பேசவேண்டும்;பயப்படாதேம்மா! யாரும் ஒன்றும் சொல்லிவிடமாட்டார்கள். கல்யாண தினத்திலிருந்து தனித்து சந்திக்கவே முடியாது என்னையும் உன்னையும் ஜனங்கள் சூழ்ந்துகொண்டிருந்ததால் நான் பயந்து தவியாய்த் தவிக்கிறேன். அந்த அதிர்ச்சியே எனக்கு உடல்நலம்கூடக் குறைந்துவிட்டது. அதுகண்டு என் மாமியாரும் கணவரும் நடுங்கிப்போய்விட்டார்கள்...ஏம்மா! நிஜம்மா விஷயத்தைச்சொல்லு; அப்பாவின் சக்தியும் நிலைமையும் எனக்குத் தெரியாதா? அப்படிக்கு இருக்க திடீரென்று இத்தகைய பெருந்தொகையைச் செலவிட்டுச் சகலமும் செய்திருப்பது எப்படியம்மா நடந்தது? தவிர பெரிய நன்கொடை வேறு கொடுத்திருக்கும் விஷயம் பத்திரிகையில் படித்துத் திடுக்கிட்டேன். ஒன்றா இரண்டா! பத்தாயிரம் ரூபாய் என்றால் நம்பமுடியவில்லையே இந்த ரகஸியத்தைமட்டும் எனக்குச் சொல்லிவிடம்மா! அப்பா பாங்கில் காஷியராக இருப்பதால்......

-என்று முடிப்பதற்குள் சொக்கம்மாள் நாலாபுறமும் பார்த்து, பயந்தபடியே, "உஸ்! லக்ஷ்மீ! 'பகல் பக்கம் பாரு;

இரவு அதுவும் பார்க்காதே' என்பது பழமொழி. அதை மறந்து போய் இதென்னம்மா கேள்வி? இதோ பார்! உன்னைப் போலவே நானும் ஒவ்வொரு வினாடியும் இந்த மர்மத்தின் உண்மையறியாது பயந்து நடுங்குகிறேன். எத்தனை முறை உன் பிதாவைக் கேட்டாலும் சரியான பதிலே இல்லை........ லக்ஷ்மீ! அதோ உன் மாமனார் படி ஏறுகிறார்; சீக்கிரம் போய் விடு. இதைப்பற்றிப் பிறகு பேசலாம். வீணான எண்ணத்திற்கு இடம் கொடுக்காதே" என்று அணுகுண்டு வெடிப்பதுபோல் சொல்லியனுப்பிவிட்டதால், லக்ஷ்மியின் குழப்பம் மேலும் பதின்மடங்காகப் பெருகியதேயன்றிக் குறையவில்லை.

இந்த ஸமயம் மாமனார் எதற்காகவரவேணும்? இப்போது விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம் என்று வந்தால் இவர் ஏன் வந்து சேர்ந்தார்?.........என்கிற வெறுப்புடன் தன்னறைக்குச் சென்றாள்.........இந்த நேரத்தில் இப்புதிய ஊரில் அப்பாவுக்கு வெளியில் செல்ல எங்கு இடமிருக்கிறது? ஒன்றுக்கொன்று ஒரே வேடிக்கையாக இருக்கிறதே!...... வேடிக்கை மட்டுமா? அதன் மத்தியில் பயங்கரமும்கூடக் கலந்தல்லவா இதயத்தைத் துளைக்கிறது!...என்று கலங்கியபடி உள்ளே வந்தாள். அப்போதும் கணவன் வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டு குழப்பத்துடன் படுத்துவிட்டாள். பிறந்த வீட்டைப்பற்றி ஒருகுழப்பம்! புகுந்த வீட்டைப்பற்றிய ஒரு அமர்க்களம்! இதென்ன போதாத காலக்கொடுமை?...... என்ற வேதனை அவளுடைய நெஞ்சை மலைபோலழுத்தியது.

24

மறுதினம் காலையில் பாண்டும் மேளமும் தடபுடல் படுகிறது! முன்பக்கமும் பின்பக்கமும் இருந்த திறந்தவெளி மைதானத்தில் பந்தலும் விளக்குகளும் நாற்காலிகளும் தடபுடலபடும் ஆனந்தம் பொதுமக்களுக்குப் பேரின்ப வைபவமாக இருக்கிறதேயன்றி முக்யமாய் வனஜா சபையில் நடமாடாமல் படுத்துவிட்ட வருத்தம் அவள் பெற்றோரை வாட்டுகிறது. எற்கெனவே உள்ளமனவேதனையுடன்லக்ஷ்மிக்கு ஒரு புதிய அதிர்ச்சியும் சேர்ந்தது; அதாவது, சேகரனின் வீட்டிற்கு அடுத்த வீடு விற்பனைக்காக ஒரு வருஷகாலமாய்ப் பேசப்பட்டு வந்தது. விலை அதிகம் என்று சிலர் வாங்காது நாட்கள் கடந்தன; அத்தகைய வீட்டை 25 ஆயிரம் ரூபாய் கொடுத்து லக்ஷ்மியின் பிதா வாங்கி இன்று விருந்துநடக்கும் மங்களகரமான நல்ல நாளில் பலபேர்களின் முன்பு வீட்டுப் பத்திரங்களை நீலகண்டன் மருமகப்பிள்ளைக்கு பூமிதானமாக

ஓதிவிட்ட அதிசயத்தை எல்லோரும் ப்ரமிப்புடன் வியந்தார்கள்; அதே அதிசயம் லக்ஷ்மிக்கும் அவள் தாயாருக்கும் ஓரே அதிர்ச்சியாகி விட்டது! நீலகண்டனின் முகத்தில் ஒருவிதமான மாறுதலுமின்றிப் பெருமிதத்துடன்தான் காணப்பட்டார்!

விருந்திற்கு வந்திருந்த அத்தனை பேர்களும் "அடடாடா"! என்று ப்ரமித்து, நீலகண்டனை ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக்கொண்டு, பாராட்டும் புகழும் அள்ளிஅள்ளி வீசினார்கள். கல்யாணமாகியதும் புதிய காரில் வந்த சமயம் லக்ஷ்மிக்கு மயக்கம் வந்ததுபோல் இன்றும் மணையில் உட்கார்ந்திருக்கையில் தலை சுற்றலும் ஆகாயமும் பூமியும் ஓரேயடியாக ஆடுவது போன்ற வேதனையும் உண்டாகியது. இந்த ஆச்சரிய அதிர்ச்சியுடன் தனது சித்தப்பா வருகிறாரா? என்று நாலாப்பக்கமும் கண்கள் துளாவுகின்றன.

யார்யாரோ! ஏதேதோ பரிசுகளைக் கொடுத்து ஆசீர்வதிப்பதைக்கூடக் கவனித்து ப்ரதிவந்தனம் செய்ய அவளால் முடியவில்லை; அத்தனை கலவரம் நிரம்பித் தவித்தவாறு காலை விருந்து முடிந்துவிட்டது; சித்தப்பா வரவில்லை; ஒருவேளை மாலை டீபார்ட்டிக்கும், இரவு டின்னர் பார்ட்டிக்குமாவது வருவாரா பார்க்கவேண்டும்.........என்று லக்ஷ்மி உள்ளம் எண்ணி எதிர்பார்த்தது.

லக்ஷ்மிக்காக வாங்கிய புதிய பங்களாவில் தடபுடல் அலங்காரங்களுடன் டீபார்ட்டி நடக்க சகல ஏற்பாடுகளும் அமர்க்களப்படுகிறது. இந்தக் காலத்து பேஷனைப்போல் மாலையுங்கழுத்துமாய் வாசலில் நின்று வருகிறவர்களைத் தாங்களே வரவேற்றுக் கைகுலுக்குவதும் நமஸ்கரிப்பதும் பரிசுகளை வாங்கிக்கொண்டு நமஸ்கரிப்பதுமான செய்கை சிலருக்கு மிகமிக உயர்வாகவும் சிலருக்கு விளையாட்டுக் கேலியாகவும் தோன்றுவதை நாம் பல பெரிய மனிதர்கள் வீட்டுக் கல்யாணங்களில் பார்க்கிறோம்.

இதுபோன்ற கல்யாணங்கள் சிலவற்றைப் பார்த்துத் தனக்குள் வெறுத்துள்ள லக்ஷ்மிக்குத்தான் அம்மாதிரி வாசலில் நின்று வரவேற்கப் பிடிக்காமல்...அமரிக்கையாய் ஒரு இடத்தில் அமர்ந்திருக்கவேண்டும்...வருகிறவர்கள் அந்த இடத்திற்கு வந்து வாழ்த்துக் கூறட்டும்...என்று லக்ஷ்மி தீர்மானித்துத் தன் கணவனுக்கும் சொல்லியிருந்ததால் அப்படியே செய்ய இசைந்தான். மாலை நல்லவேளையில் அந்தப் புதிய வீட்டிற்கு க்ருகப்ரவேசம் செய்து பின்னர் டீபார்ட்டிக்குத் தயாரானார்கள். சேகரனின் சிநேகிதர்களும் அவன் பிதாவின் சிநேகிதர்களும் ஏராளமானவர்கள் வந்து கலந்துகொண்டார்கள். ஆனால் சேகரும் லக்ஷ்மியும் எதிர்பார்த்த பாஸ்கரன் வராதது மிகவும் மனவேதனையாகிவிட்டது. ஒரு

வரை யொருவர் பார்த்துக்கொள்கிருர்கள். வெளியில் சொல்ல முடியவில்லை. தன் பெற்ருேர்கள் ஆதியில்காட்டிய விரோதத்தை எண்ணித்தான் அவர் வரவில்லை என்று லக்ஷ்மி தீர்மானமாகத் தெரிந்துகொண்டாள்.

டீபார்ட்டி முடிந்து சச்சேரி ஆரம்பித்தபிறகு நன்ருக இருட்டிவிட்டது. அச்சமயம் ஒருவர் வந்து ஒரு பெட்டியைப் பரிசாகக் கொடுத்துவிட்டுச் சென்ருர். இது யாருடையது என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதும் புரிந்துகொள்ள முடியவில்லை. பரிசுகள் எல்லாவற்றையும் தன் தாயார்மூலம் தனது வீடுதிக்கு அனுப்பிய லக்ஷ்மிக்கு இரவு நிதானமாகப் பார்த்துக்கொள்ள ஆசை தூண்டியது.

இரவு விருந்து சகலமும் முடிந்தபிறகு எல்லோரும் தம் தம் வீடு சென்ருர்கள். வெகு நேரத்திற்குப்பிறகு லக்ஷ்மி தன் படுக்கையறைக்குச் சென்ருள். அவளுடைய எண்ணம் முற்றும் தனக்கு வந்துள்ள அந்தப் பெட்டியின்மீதே கண்ணுக இருந்ததால் தம்பதிகள் அதையே திறந்து பார்த்தார்கள்:

"உலகத்தையே மறந்து ஆனந்த ஸாகரத்தில் மிதக்கும் தம்பதிகளே! சினிமாக்காரர்கள்... இளப்பம், ஒழுக்கமற்றவர்கள், பக்திக்கு லாயக்கற்றவர்கள்... என்றெல்லாம் நீங்கள் எண்ணி ப்ரசாரம் செய்யும் விந்தையை நினைக்க நான் வருத்தப்படவில்லை. உங்கள் பின்னுல் காத்துக் கொண்டுள்ள விபரீதமான அவமானத்தை—ஆபத்தை—குடும்பமே சிதறிப்போகிற பயங்கரத்தை—நீங்கள் சிந்திக்கக்கூட இல்லாமல் உங்களுக்கு உபயோகமற்ற விஷயத்தில் தலையிடத் துணிந்துவிட்டீர்கள்? ப்ரமாத சீரும், சிறப்பும், பங்களாக்களும், தர்ம நன்கொடைகளும் ஏராளமாக வாரிவழங்கும் உங்கள் வள்ளலான பிதா—மாமனுர்—வெகு சீக்கிரத்திலேயே கைக்கு இரும்புகொலு ஸணிந்து கம்பி எண்ணும் கதிக்கு வரவிருப்பதை நான் எச்சரிக்கின்றேன். இந்த சமயம் நான் ஒரு ரகஸியத்தைச்சொல்ல முன்வந்திருக்கிறேன். அதாவது சினிமா ராணி—உலகம்போற்றும் நக்ஷத்திரம்—ஸ்ரீமதி உத்திரா தேவி—மனப்பூர்வமாக உங்கள்மீது அபரிமிதமான ப்ரேமை கொண்டிருக்கும் விஷயம் அவர் வாயாலேயே சொல்லக்கேட்டு நான் ப்ரமிக்கிறேன். நான் அந்த நக்ஷத்திரத்தின் ப்ரைவேட்டு ஸெகரெடரி ஆதலால் இன்று அவர் படுக்கையில் சொல்லியதை இப்போது எழுதுகிறேன். அவருடைய ப்ரேமையின் அளவைச் சொல்லிமுடியாதாம். நீங்கள் அவருடைய கணவரின் கீழ்த்தான் வேலை பார்ப்பதும் அவருக்குத் தெரியுமாம்.

அவரும் நீங்களும் சேர்ந்து உத்திராதேவியைக் கொலை செய்துவிடவே இந்த மோட்டார் விபத்தை உண்டாக்கியது அவருக்குத் தெரியுமாம். எது எப்படியிருப்பினும் தான் கெட்டுப்போனதுபோனதுதான்; இனி திருந்திவிட முடியாது. எனினும் உங்களிடம் ஒரு வேண்டுகோளைத் தெரிவிக்கச்சொன்னார்கள். நேற்று அங்குவந்தது உங்கள் சகோதரி என்பது தெரியாமல்போய்விட்டதாம். தெரிந்திருந்தால்விஷயமே வேறுவிதமாக மாறிப்போயிருக்குமாம். இப்போதும் அவரதுவேண்டுகோளை ப்ராணனைப் பிடித்துக்கொண்டு தெரிவிக்கின்றார்களாம். அதாவது: இனி அந்தம்மாள் பிழைப்பது துர்லபமாம். அப்படிப் பிழைத்தாலும் கால் ஊனந்தானாம். அவர்கள் அம்மாதிரி ஊனமாகி வாழ்வதை விரும்பவில்லை ; சாவையே எதிர்பார்க்கிறார்களாம். அவரைச் சேர்ந்தவர்கள் உடனே உங்கள்மீது வழக்குத் தொடுத்து உங்களையும் அவர் கணவனையும் சந்திசிரிக்க வடித்து உபத்திரவிக்கவேண்டும் என்று துடிதுடிக்கிறார்களாம். அந்த விஷயத்தில் உத்திராதேவிக்கு மனது வரவில்லையாம். தான் சாகப் போகும் தருவாயில் ஒரே ஒரு கோரிக்கை உங்களிடம் எதிர்பார்க்கிறார்களாம் அதாவது: அவருடைய உயிர் போவதற்குள் உங்களையும் தர்மபத்தினியையும் ஒருமுறை பார்த்துத் தன்னுடைய ஆவலைத்தீர்த்துக்கொள்ள வேண்டுமாம் ; அதோடு உங்கள் மாமனாருக்கு வரப் போகும் போராபத்தைத் தானே பணம் பூராவும் கொடுத்துத் தீர்த்துவிடுகிறாராம்; பாங்கி கேஷ்கீப்பாக இருப்பதால் கையாண்ட சொத்தும் செயலும் அம்பலமாகிவிடும்; அந்த விபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள இதுதான் வழியாம்;ஆதலால் உங்கள் அன்யோன்ய வாழ்க்கையைப் பாழாக்காமல் இனியும் இனிப்பாக இருப்பதற்காகவே இதை எழுதுகிறார்களாம். தாங்கள் இருவரும் உடனே வந்து பார்த்துப்பயனடையாவிடில் ஆபத்தில் அவதிப்பட நேரும் என்பதை எச்சரிக்கிறார்களாம்.''

என்று எழுதியிருந்ததை சேகர்படித்ததை லக்ஷ்மியும் கேட்கக் கேட்க ஏற்கெனவே எந்த விஷயத்திற்காகத் தன் பிதாவிடம் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கிறாளோ அதையே ஊர்ஜிதப்படுத்தும் பயங்கரச்செய்தியும், கூடவே தன் கணவன்மீது சினிமாக்காரி ப்ரேமைவைத்துள்ள அதிர்ச்சியான விஷயமும் ஒன்று சேர்ந்து கேட்டதும் லக்ஷ்மிக்கு சப்தநாடிகளும் அடங்கிப்போய் வண்டியில் மூன்பு சாய்ந்ததுபோல் சாய்ந்துவிட்டாள். சேகருக்கும் இன்னதென்று புரியாத நிலையில் தலைசுற்றியது.

183184

[ராப்பர் 2-ம் பக்கத்தொடர்ச்சி.]

சங்கத்தின் அன்னையின் பரிசுத்தமான இதய அன்புடன் செய்த வேண்டுகோள் பயனையளித்ததுபோல், இன்னும் மற்ற சகோதரிகளும் ஏதோ கூடுமானவரையில் இந்த 101-ரூபாய் விஷயத்தில் சகாயம் செய்தால் மகத்தான உபகாரமாகும்.

தவிர ஒவ்வொரு அங்கத்தினரும் ஒவ்வொரு புதிய அங்கத்தினரைச் சேர்த்துக்கொடுத்து உதவியளித்தால் சங்கத்தின கடன் சுமை ஒரு சிறிதாவது குறைந்து நமது லக்ஷியமும் திட்டமும் ஈடேறி சிறந்த முறையில் நன்ருக ஸேவைசெய்ய முடியும்.

சங்கத்தின் அன்னையவர்களுக்கும் மற்ற ஷை இரு சகோதரிகளுக்கும் சங்கம் தனது பரிபூர்ண வந்தனத்தையும் நன்றியறிதலேயும தெரிவித்துக்கொள்கிறது. — வை. மு. கோ. காரியதரிசி,

மஹாத்மாஜி ஸேவாசங்கம்.

*

அன்னையின்
அன்புக் காணிக்கை

என் குழந்தைகளே! சகோதரிகளே! மகாத்மாஜி ஸேவா சங்கத்தை ஆரம்பித்தபோது எனக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. பிறகு கேள்விப்பட்டு நாளுக ஒருநாள் போய்ப் பார்தேதன். நிறைய பசங்கள் ஸ்தோத்ர பாடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பக்தீதான் ஜீவன்: அதைக் கண்டு நான் ஸந்தோஷப்பட்டேன். ஆனல், குழந்தைகளுக்கு வகுப்புமட்டும் நடக்கும் ஸங்கத்தில் நமக்கு என்ன இருக்கிறது என்றுதான் எண்ணினேன். பிறகு வெள்ளிக்கிழமை, ஏகாதசி பஜனைகளுக்குச் சென்று பார்த்தபோது, என்னைப்போல பெரிய சகோதரிகள் நிறைய இருப்பதைக் கண்டு பூரித்தேன். பிறகு நானும் ஸங்கத்தில் ஐக்யமாகிவிட்டேன். ஸங்கத்தின் எந்த நிகழ்ச்சிக்கும் நான் முதல்முதல் ஆஜராகி வருகிறேன். சென்ற வருஷம் சங்கத்துக்கொரு சொந்தமாகச் சிறுகுடிசை இல்லையே என்று கண்ணீர் விட்டுக் கலங்கினேம்.

ஸ்ரீமதி கோதைநாயகி அம்மா வீட்டில் பஜனை நடந்தபோது, என்னை அறியாமல் ஒருபாட்டுவந்தது; அதாவது நின்னுவிடிசிகதலனுரா : ஸ்ரீராமா, ஒகஸ்தலமு மாதுஈயகபோதே; பாடி வேண்டினேன. பகவானின் கருணையால் எதிர்பாராதவிதம் ஒரு குடிசைகிடைத்து விட்டது. அந்தச் சந்தோஷத்தில் மறுபடியும் பகவானிடம் என் மனக்களிப்பைத் தெரிவித்துப் பஜனையும் செய்தேன். என்னுடைய வாழ்க்கையில் நான் பலதரம் பகவானின் கருணையைக் கண்டு தேறியவள். சங்கத்திற்குச் சிறுகுடிசையைக் கடன் வாங்கியாவது துணிந்து வாங்கச் செய்த பகவான் அதை அடைக்க வழிகாட்டாமலாபோவான்! அவன் திருவடிகளேயே துணையெனக்கொண்டு நம்பியிருக்கிறேம்.

ஸமீபத்தில் நான் தேகஅஸெளகர்ய காரணமாகப் படுத்துவிட்ட சமயம சங்கத்தின் நினைவே என்மனதில் ஸதாஉலாவியது.

[தொடர்ச்சி: பின்பக்கம்.]

அன்புக்காணிக்கை (தொடர்ச்சி)

அணிப்பிள்ளையும் மணலை உதிர்த்து ஸேதுவுக்கு அணை கட்டியதுபோல, ஏதோ எனக்குச் சக்தியானுஸாரம் உதவிபுரிய ஆசை தூண்டியது. என் குழந்தைகளிடம் சொன்னேன். அவர்களும் பரமஸந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டார்கள். என்னுடைய அன்புக்காணிக்கையாக 1000 நுபாயை சங்கத்தின் அபிவ்ருத்திக்காகக் கொடுத்தேன். 10 ஆயிரம் ரூபாய்க்குமேல் கடன் இருக்கும் பயத்தை நினைத்தால் இது எம்மாத்திரம் என்று தான் தோன்றுகிறது. இருந்தாலும் இதைப்போல இன்னும் பல சகோதர சகோதரிகளும் சிறு சிறு துகைகளை உதவிசெய்து இந்தத் தருமமும் பக்தியும் கலையும் .வளர்க்கும் இச்சங்கத்தை வெகு மேன்மையாகக் கொண்டுவந்துவிடலாம்என்று எனக்கு நம்பிக்கை பூர்ணமாக இருக்கிறது.

ஒரு சின்ன வீட்டில் ஆரம்பித்த காங்கிரஸ் மகாசபை அசைக்கமுடியாத பெரிய ப்ரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அசைத்து நிரந்தரமான சுதந்திரத்தை வாங்கிக்கொடுததது! அதேபோலத் தான் சகலமும். "சிறுகக்கட்டிப் பெருக வாழ்" என்ற பழமொழிப் படிக்கு நமது சங்கமும் சிறுக ஆரம்பித்து ஆலமரம்போல் தழைத்து அழியாத புகழுடன் ஓங்கி வளரவேண்டும் என்பது என ப்ரார்த்தனை.

ஓர் வேண்டுகோள்

என் சகோதரிகளிடம் நான் ஒரு வேண்டுகோளைத் தெரிவிக்கிறேன். அதாவது, சங்கத்துக் கட்டடநிதிக்காக 101 நுபாய் கடன் கொடுததிருப்பவர்களில், சக்தியும் பக்தியும் சங்கத்தின்பால் அபிமானமும் உள்ளவர்கள் அதை நன்கொடையாகக்கொடுத்துப் பேருதவி செய்துவிட்டால், கடன் பளுவு நம் தலையை மலைபோல் அழுத்துகிறதே, அது சிறுது குறைந்துவிடும். கடன்பாரம் நீங்கினால்தான் சங்கததின இதரகாரியங்கள் நன்றாக நடக்கும்.

நாம் நன்றாக யோசனைசெய்து பார்த்தால் சங்கத்து நிலைமை நமக்கு நனறாகப் புலப்படும். ஏதோ நான சிறுதுகை கொடுத்து விட்டேனே, இதற்காக உங்களையும் கொடுக்கும்படி வற்புறுத்துகிறேன என்று நீங்கள் நினைக்கக்கூடாது. சங்கம் நமது சொந்தக் குழந்தையைப் போன்றது. அந்தக் குழந்தையின் சகல விதமான நன்மைகளையும் கவனிக்க நாம்தான் பொறுப்பாளி என்பதை உணாந்து தயவுசெய்து 101 ரூபாய் கடன கொடுத்தவர்கள் நனகொடையாக மாற்றிவிடும்படி மிகவும் தாழ்மையுடன் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். அல்லது ஜீவிய சந்தாதாரராகச் சேர்ந்து 60 ரூபாயைக் கழித்து மீதி 41 ரூபாயை நனகொடையாக உதவி, சங்கததுக் குழந்தையை ஆரோக்கியமாய் வளர்த்துப் பாதுகாக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். எனது இந்தச் சிறிய தொகையைப் பாராட்டி இத்தனை பெரிய கவுரவம் தந்து கொண்டாடுகிற எல்லா சகோதரிகளுக்கும் எனது ஆசிர்வாதங்களைத் தெரிவிக்கிறேன்.

—N. புஷ்பம்மாள்

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.